நம்பிக்கை கொண்ட பெண்களின் அடையாளங்களும் தற்காலத்தில் அவற்றைப் பெறுவதற்கான வழிமுறையும் பக்கம் 3

ஹஸ்ரத் இமாம் அபூஹனீஃபா (ரஹி) பக்கம் 10

பாலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதி பக்கம் 15

காணாமற்போன மெர்சிடஸ் காரும் இறை இருப்பிற்கான சான்றும் பக்கம் 20

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | April 2024 | Vol. 3 - Issue No. 5

Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311





# திருக்குர்ஆன்

وَمَا لَكُمْ لَا تُقَاتِلُونَ فِي سَبِيلِ اللّٰهِ
وَالْمُسْتَضْعَفِيْنَ مِنَ الرِّجَالِ وَالنِّسَآءِ
وَالْوِلْدَانِ الَّذِيْنَ يَقُوْلُوْنَ رَبَّنَآ اَخْرِجْنَا
مِنْ هٰذِهِ الْقَرْيَةِ الظَّالِمِ اَهْلُهَا ۚ
وَاجْعَلْ لَّنَا مِنْ لَّدُنْكَ وَلِيًّا ۚ وَّاجْعَلْ لَّنَا
مِنْ لَّدُنْكَ نَصِيْرًا ؕ

மேலும் அல்லாஹ்வின் பாதையிலும், பலவீனர்களான ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் ஆகியோரின் பாதையிலும் நீங்கள் போர் செய்யாதிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? அவர்கள் எங்கள் இறைவா! அநீதி இழைப்போர் வாழ்கின்ற இந்த ஊரிலிருந்து எங்களை வெளியேற்றுவாயாக; உன்னிடமிருந்து எங்களுக்கு ஒரு நண்பரை உருவாக்குவாயாக. மேலும் உன்னிடமிருந்து எங்களுக்கு ஓர் உதவியாளரை ஏற்படுத்துவாயாக என்று கூறுகின்றனர். (4:76)



# ஹதீஸ்

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللهِ صلّى الله
عليه وسلّم: ثَلاَثَةٌ لاَ تُرَدُّ دَعْوَتُهُمُ الصَّائِمُ حَتَّى يُفْطِرَ
وَالإِمَامُ الْعَادِلُ وَدَعْوَةُ الْمَظْلُومِ يَرْفَعُهَا اللهُ
فَوْقَ الْغَمَامِ وَيَفْتَحُ لَهَا أَبْوَابَ السَّمَاءِ وَيَقُولُ الرَّبُّ
وَعِزَّتِي لأَنْصُرَنَّكَ وَلَوْ بَعْدَ حِينٍ.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “மூன்று பேருடைய துஆக்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ளப்படாமல் இருப்பதில்லை. நோன்பாளியின் துஆ – அவர் நோன்பு திறக்கும் வரை, நீதியைப் பேணும் தலைவரின் துஆ – அநீதிக்கு ஆளான மக்கள் செய்யும் மன்றாடல். அல்லாஹ் அவர்களின் மன்றாடலை மேகங்களுக்கு மேலே உயர்த்துகின்றான். மேலும் அதற்காக விண்ணின் வாசல்களைத் திறந்து விடுகின்றான். மேலும் அவன் அறிவிக்கின்றான்: ‘என் மகத்துவத்தின் மீது ஆணையாக! நிச்சயமாக நான் உங்களின் உதவிக்கு வருவேன். சிறிது காலத்திற்குப் பிறகாயினும் சரியே!’” (திர்மிதி ஹதீஸ் எண். 3598)

# நம்பிக்கை கொண்ட பெண்களின் அடையாளங்களும் தற்காலத்தில் அவற்றைப் பெறுவதற்கான வழிமுறையும்

ஜனாபா அமத்துன் நஸீர் புஷ்ரா சாஹிபா

தமிழாக்கம்: இப்னு வஸீம்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“அனைத்தையும் விட முதலாவது திருக்குர்ஆன் ஆகும்........ எவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சிறு கட்டளையையும் தவிர்க்கிறாரோ அவர் ஈடேற்றத்திற்கான வாசலைத் தன்னுடைய கைகளாலேயே தனக்கு அடைத்துக் கொள்கிறார் என்று நான் உண்மையாகவே கூறுகிறேன்.

உண்மையான மற்றும் முழுமையான ஈடேற்றத்திற்கான வழிகளைத் திருக்குர்ஆனே திறந்து தந்திருக்கிறது. மீதமுள்ள அனைத்தும் அதன் நிழல்களாக இருந்தன. ஆகவே, நீங்கள் திருக்குர்ஆனை மிகவும் கருத்தூன்றி ஓதுங்கள். அதனை மிகவும் அதிகமாக நேசியுங்கள். நீங்கள் வேறு எவரையும் நேசித்திடாத அளவுக்கு அதை நேசித்திடுங்கள். ஏனெனில், இறைவன் என்னை நோக்கி ‘அல் கைரு குல்லுஹு ஃபில் குர்ஆன்’ என்று கூறியுள்ளான். அதாவது, எல்லா விதமான நன்மைகளும் திருக்குர்ஆனில் உள்ளன. உண்மையும் இதுவேயாகும். இதனைக் காட்டிலும் மற்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும் மக்களைப் பார்த்து எனக்குப் பரிதாபமாக உள்ளது.

உங்களின் எல்லா விதமான வெற்றிகளுக்கும் ஈடேற்றத்திற்கும் தலையூற்று திருக்குர்ஆனில் உள்ளது. திருக்குர்ஆனில் காணப்படாத உங்களுடைய எந்த மார்க்கத் தேவையும் இல்லை. இறுதி நாளில் உங்களது நம்பிக்கை உண்மையானதா, பொய்யானதா எனப் பிரித்துக் காட்டக்கூடிய நூல் திருக்குர்ஆன் ஆகும். திருக்குர்ஆனால் உங்களுக்கு நேரடியாக நேர்வழி காட்ட முடிந்தது போன்று, திருக்குர்ஆனைத் தவிர வானத்தின் கீழ் வேறெந்த நூலும் இல்லை. (நூல்: கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19, பக்கம் 21)

எனவே, ஒரு நம்பிக்கை கொண்ட (ஆணாகட்டும் அல்லது பெண்ணாகட்டும் அ)வருக்கான எல்லாக் கட்டளைகளும், அடையாளங்களும் திருக்குர்ஆனில் உள்ளன. இந்தக் குறுகிய நேரத்தில் எனது உரையில் அனைத்தையும் எடுத்துரைப்பதோ சாத்தியம் இல்லை. நம்பிக்கை கொண்ட பெண்களின் சில அடையாளங்களை இறை கட்டளையின் ஒளியில் எடுத்துரைப்பதற்கு முயற்சி செய்வேன். வ பில்லாஹித் தவ்ஃபீக். (அல்லாஹ்விடமிருந்தே நல்வாய்ப்பு கிடைக்கிறது). அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

اَلتَّآئِبُوْنَ الْعٰبِدُوْنَ الْحٰمِدُوْنَ السَّآئِحُوْنَ الرّٰكِعُوْنَ السّٰجِدُوْنَ الْاٰمِرُوْنَ بِالْمَعْرُوْفِ
وَالنَّاهُوْنَ عَنِ الْمُنْكَرِ وَالْحٰفِظُوْنَ لِحُدُوْدِ اللّٰهِ ؕ وَبَشِّرِ الْمُؤْمِنِيْنَ

பொருள்: பாவமன்னிப்புத் தேடுபவர்கள், இறை வணக்கம் செய்பவர்கள், (இறைவனைப்) புகழ்பவர்கள், (இறை வழியில்) பயணம் செய்பவர்கள், (இறைவனிடம்) குனிபவர்கள், (தொழுகையில்) சிரம் பணிபவர்கள்,



நன்மையை ஏவுபவர்கள், தீயவற்றிலிருந்து தடுப்பவர்கள், அல்லாஹ்வின் வரம்புகளைப் பாதுகாப்பவர்கள் (ஆகிய அனைவரும் உண்மையான நம்பிக்கை கொண்டவர்கள் ஆவர்). மேலும், நீர் நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தியினை வழங்குவீராக. (திருக்குர்ஆன் 9:112)

எனவே, ஓர் உண்மையான நம்பிக்கை கொண்ட, முஸ்லிம் பெண்ணின் பண்புகளை உருவாக்கிக் கொண்டவாறு எல்லா நேரமும் இறைவனைப் புகழ்வதில் நமது உள்ளம் மூழ்கியிருக்க வேண்டும். மேலும், ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய இந்த நிலை நம்மிடம் உருவாக வேண்டும். அன்னார் கூறுகிறார்கள்:

(உலகத் தொடர்புகளைத்) துண்டித்துக் கொண்டு உங்கள் இறைவன் பக்கம் செல்லுங்கள். உலக மோகத்தை விட்டு விடுங்கள். அவனுக்காகவே ஆகி விடுங்கள். அவனுக்காகவே வாழ்க்கையை வாழுங்கள். அவனுக்காக ஒவ்வோர் அசுத்தத்தையும் பாவத்தையும் வெறுத்திடுங்கள். ஏனென்றால், அவன் தூயவன் ஆவான். நீங்கள் இறையச்சத்துடன் இரவைக் கழித்தீர்கள் என்று ஒவ்வொரு விடியலும் உங்களுக்காக சாட்சி பகர வேண்டும். நீங்கள் (இறைவனுக்கு) அஞ்சி அஞ்சி பகலைக் கழித்தீர்கள் என்று ஒவ்வோர் இரவும் உங்களுக்காக சாட்சி பகர வேண்டும். (நூல்: கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 12)

எனவே, இறையச்சத்தை மேற்கொள்வதும் அவசியம் ஆகும். அதாவது, மனிதன் இறையச்சத்தின் நுட்பத்திலும் நுட்பமான வழிகளை மேற்கொள்ளும் அளவிற்கு ஈமானின் தரத்தை எட்டுவதும் அவசியமாகும்.

அல்லாஹ் கூறுகிறான்:

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِنْ تَتَّقُوا اللّٰهَ يَجْعَلْ لَّكُمْ فُرْقَانًا وَّيُكَفِّرْ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ وَيَغْفِرْ لَكُمْ ؕ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ

அதாவது, நம்பிக்கை கொண்டவர்களே! நம்பிக்கை கொண்டதற்கான எதிர்பார்ப்பை முழுமைபடுத்த வேண்டும் எனில், இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். உங்கள்



வாழ்வைத் தூயதாகவும், பரிசுத்தமானதாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இந்த என் அடியார்கள் முயற்சி செய்துள்ளார்கள் என்று இறைவன் அறிந்து கொள்ளும் பொருட்டு, மனி குலத்திற்கு அனுதாபம் காட்டக்கூடியவர் -களாக ஆகி விடுங்கள். (திருக்குர்ஆன் 8:30)

இறையச்சத்தைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தாம் இயற்றிய கவிதை வரியில் இவ்வாறு கூறுகிறார்கள்:

ஒவ்வொரு நன்மையின் வேர் இந்த இறையச்சம் ஆகும்.
இந்த வேர் நிலைபெற்றிருந்தால் எல்லாம் நிலைத்திருக்கிறது.

பிறகு, எல்லாம் வல்ல அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

اَطِيْعُوا اللّٰهَ وَرَسُوْلَهٗٓ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ அதாவது, நீங்கள் நம்பிக்கை கொண்டவர்கள் எனில், அல்லாஹ்வுக்கு எப்படி கட்டுப்பட வேண்டுமோ அப்படி கட்டுப்படுங்கள். கண்ணியத் -திற்குரிய தூதர் (ஸல்) அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டவாறு, அன்னாருடைய அழகிய முன்மாதிரியை உங்களுடைய வாழ்வில் முழுமையாக வழக்கத்திற்குக் கொண்டு வந்து விடுங்கள். (திருக்குர்ஆன் 8:2)

திருக்குர்ஆனைத் துவக்கத்திலிருந்து இறுதி வரை அறிந்து கொள்ள வேண்டியது ஒவ்வொரு நம்பிக்கை கொண்ட பெண்ணின் கடமையாகும். இதற்கு முன்னர் எவருக்கும் கிடைக்கப் பெற்றிராத, திருக்குர்ஆனின் அந்த இறை ஞானங்களும், விளக்கவுரைகளும் இறுதிக் காலத்தின் மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள வகையில் நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம்.

அவற்றைப் படிப்பதும் அவற்றின் படி செயல்படுவதும் நமது கடமையாகும். நீங்கள் அதை எந்த அளவுக்கு நேசிக்க வேண்டும் என்றால், உங்களுடைய வாழ்வைத் திருக்குர்ஆனுக்கு ஏற்ப ஆக்கிக் கொள்ளுங்கள். மேலும், ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் மீது தாம் கொண்டிருக்கும் நேசத்தை வெளிப்படுத்தியவாறு (தமது கவிதை வரியில்) கூறுகிறார்கள்:

உனது மறையை முத்தமிட வேண்டும் என்ற விஷயமே
எப்பொழுதும் எனது உள்ளத்தில் இருக்கிறது.
நான் திருக்குர்ஆனைச் சுற்றி வர வேண்டும்.
இது தான் என்னுடைய கஅபா ஆகும்.

திருக்குர்ஆனின் மீதான இது போன்ற நேசத்தைத் தான் நீங்கள் உங்களுடைய பிள்ளைகளின் உள்ளத்தில் உருவாக்க வேண்டும்.

சாதிக்காத் (எனப்படும் உண்மை பேசக்கூடிய பெண்களாக) ஆவதும், நம்பிக்கை கொண்ட பெண்களின் அடையாளங்களில் ஒன்றாகும். அதாவது, உங்களுடைய சொற்களிலும், செயல்களிலும் உண்மையில் நிலைத்திருக்க வேண்டும். பைஅத் செய்யும் போது நாம் எடுத்துக் கொண்ட உறுதிமொழியைப் பேணிக்காக்க வேண்டும். நாம் சொல்வதை செய்து காட்ட வேண்டும்.

பௌதிகத்திற்கு இரையாகிக் கொண்டிருக்கக்கூடிய, மேற்கத்திய நாகரித்தின் மீது மதிப்பச்சம் கொண்டிருக்கக் கூடிய, ஆடையின்மையும் வெட்கக்கேடும் நல்லதாகக் கருதப்படுகின்ற உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக் -கிறோம். இஸ்லாமிய விழுமியங்களைப் பற்றி அறிந்திராத இந்த உலகத்தில் ஒரு பெண்ணின் கடமை என்ன? அவளும் பௌதிகத்துக்கு இரையாகி விட வேண்டுமா? காலம் போன போக்கில் சென்று உலகத்தின் நிறத்தைத் தன் மீது பூசிக் கொள்ள வேண்டுமா? இல்லை! ஒருபோதும் இல்லை!

உலகத்தைத் தேடுவது ஒருபோதும் ஓர் அஹ்மதி பெண்ணின் நோக்கமல்ல. மாறாக, அவள் இந்த உலகத்தில் வாழ்ந்து எந்தத் தூய்மையான வாழ்வைத் தேடுபவளாக இருக்கிறாள் என்றால், அது குறித்து அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்:

مَنْ عَمِلَ صَالِحًا مِّنْ ذَكَرٍ اَوْ اُنْثٰى وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهٗ حَيٰوةً طَيِّبَةً ۚ وَلَنَجْزِيَنَّهُمْ اَجْرَهُمْ بِاَحْسَنِ مَا كَانُوْا يَعْمَلُوْنَ

அதாவது, ஆணாயினும் பெண்ணாயினும் எவர் நற்செயல் செய்தாலும் அவர் நம்பிக்கை கொண்டவராக இருப்பின், அவருக்கு நிச்சயமாக நாம் தூய்மையான ஒரு வாழ்வினை வழங்குவோம். மேலும், அவர்களுக்கு அவர்கள் செய்ததை விட அழகான நற்பலனை வழங்குவோம். (திருக்குர்ஆன் 16:98)

எனவே, தங்களை அருட்கொடைகளுக்கு வாரிசாக்கிக் கொள்வதும், இந்த நிரந்தர வாழ்வினைப் பெறுவதுமே நம்பிக்கை கொண்ட பெண்களின் இலட்சியம் ஆகும். அதற்காக நற்செயல்கள் ஆற்ற வேண்டிய தேவையுள்ளது. துவக்க கால நூற்றாண்டுகளின் பெண்களால் இஸ்லாமிய போதனைகள்படி அமல் செய்து தங்களுடைய வாழ்வில் புரட்சியை ஏற்படுத்த முடியும் என்றால், இன்று நம்மாலும்

அந்த முன்மாதிரிகளை உயிர்பெறச் செய்ய முடியும். ஏனெனில், இஸ்லாம் ஓர் உயிருள்ள மார்க்கமாகும். மேலும், அது எல்லாக் காலத்திலும் ஒரே போன்ற தாக்கங்களைக் கொண்டுள்ளது.

எனவே, இன்று தூய மஸீஹ் (அலை) அவர்களுடைய ஜமாஅத்துடன் நம்மை நாம் இணைத்துக் கொண்ட பிறகு நமது பொறுப்பு என்னவென்றால், நாம் தூதருக்குக் கட்டுப்படுவதற்கான இதே முன்மாதிரிகளை உயிரூட்டிக் காட்ட வேண்டும். எல்லா விதமான சம்பிரதாயங்களையும், பித்அத்களையும் வேரறுக்க வேண்டும். அரைகுறை ஆடைகள் அணியப்படுகின்ற, பர்தா அணியப்படாத இந்தக் காலத்தில் இஸ்லாமிய பர்தாவை நிலைபெறச் செய்ய வேண்டும். நம்முடைய செல்வங்களை இறைவழியில் செலவு செய்ய வேண்டும். நம்முடைய உயிர்களைக் காணிக்கையாக வழங்கி இஸ்லாத்தில் நிலைத்து நிற்க வேண்டும்.



ஒரு நம்பிக்கை கொண்ட பெண்ணின் தலையாய கடமை என்னவென்றால், அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு சரியான இஸ்லாமிய போதனையை வழங்கி வளர்க்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபியாக்கள் வழங்கியது போன்று தம்முடைய பிள்ளைகளுக்குத் தர்பிய்யத் வழங்க வேண்டும். அவர்களை இறைநேசர்களாகவும், இறைத்தூதரின் நேசர்களாகவும் திருக்குர்ஆனின் நேசர்களாகவும் ஆக்க வேண்டும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகிறார்கள்:

உங்கள் மடியில் (தவழ்ந்து) வளரக்கூடிய, உங்களுடைய கைகளில் விளையாடக்கூடிய, உங்களுடைய பாலைக் குடித்து இளம் வயதை எட்டக்கூடிய அல்லது உங்களுடைய கைகளில் பாலைக் குடித்து இளம் வயதை எட்டக்கூடிய அந்தப் பெண் குழந்தைகளுக்கும் ஆண் குழந்தைகளுக்கும், அந்தப் பருவத்தில், துவக்க காலகட்டத்தில் அவர்களுக்கு இறைவனின் நேசத்தின் தாலாட்டுகளைப் பாடுங்கள். இறைவனின் நேசம் பற்றி அவர்களிடம் பேசுங்கள். அதனால் பிறகுள்ள எல்லாப் படித்தரங்களும் உங்களுக்கு எளிதாகி விடும்.

ஹுஸூர் (ரஹி) அவர்கள் மேற்கொண்டு கூறுகிறார்கள்:

மேலும், இறைவன் மீதான நேசத்தை உருவாக்குவதற்காக நீங்கள் இறைவனைப் பற்றிய விஷயங்களைப் பேச வேண்டி வரும். இறைவனைப் பற்றிய விஷயங்களைப் பேசும் போது உங்களுடைய மனதில் தாக்கம் ஏற்படவில்லை என்றால், உங்களுடைய கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடவில்லை என்றால், உங்களுடைய உள்ளம் மென்மையாகவில்லை என்றால், பிள்ளைகள் அதனால் தாக்கம் அடைந்து விடுவார்கள் என்று நீங்கள் எண்ணுவது பொய்யான விஷயம் ஆகும். அதில் எந்த உண்மைத்துவமும் இல்லை.

எந்தத் தாய்மார்கள் இறைவனைப் பற்றி கூறும் போது, அவர்களுடைய உள்ளங்கள் உருகி கண்ணீராகி வழியத் துவங்குகின்றனவோ, எவர்களுடைய முக பாவனைகள் மாறி விடுகின்றனவோ அத்தகைய தாய்மார்களின் பிள்ளைகளே இறைவனை நேசிக்கிறார்கள்.

‘இந்தத் தாய்க்கு என்னதான் ஆயிற்று! எந்த விஷயத்தால் கவலை தோய்ந்திருக்கிறார்! எந்த உணர்வு இவரை ஆட்கொண்டுள்ளது!’ என்று குழந்தைகள் வியப்புடன் பார்க்கும் போது, இந்தத் தாக்கம்தான் பிள்ளையிடம் ஒரு மாபெரும் தூய மாற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது. இது புரட்சியின் ஆன்மாவாகும். இது புரட்சியின் உயிராகும்.

இப்படிப்பட்ட தாய்மார்களாக ஆகி விடுங்கள். இப்படிப்பட்ட தாய்மார்களாக ஆவதற்கு இறைவனிடம் உதவி கோரியவாறு அவனுடைய அழகைத் தேட வேண்டும். எதுவரை என்றால், அந்த அழகு உங்கள் மீது பிரகாசித்திட வேண்டும். மேலும், உங்களுடைய உள்ளங்களில் நீங்கள் உருகிடும் அளவிற்கான நேசத்தை நிரப்பிட வேண்டும். உருகிய பிறகு ஒரு புதிய இயல்பை ஏற்படுத்திட வேண்டும். (டில்ஃபோர்டில் உள்ள இஸ்லாமாபாத்தில் ஜூலை 27, 1991 அன்று பெண்களுக்கான ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு)

சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் டிசம்பர் 27, 2005-இல் காதியான் ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில், பெண்களுக்கு நிகழ்த்திய உரையில் நம்பிக்கை கொண்ட பெண்களின் அடையாளங்களை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:

அல்லாஹ் சிறந்த பெண்களின் தனிச்சிறப்புகளாக கூறியுள்ளவை என்னவென்றால், அவர்கள் முஸ்லிம் பெண்களாக இருக்க வேண்டும். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்றால், அதைப் புரியக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைகள் படி செயல்படக்கூடியவர்களாக இருக்க வேண்டும். நம்பிக்கை கொண்ட பெண்களாக இருக்க வேண்டும்.

ஈமானில் எந்த அளவு முழுமை பெற்றிருக்க வேண்டும் என்றால், ஒருபோதும் எந்தவொரு சோதனையும் உங்களுடைய உறுதியான பாதத்தை ஆட்டம் காண வைக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. உங்களை ஒருபோதும் இறைவனை விட்டு விலக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. மாறாக, இன்னும் அதிகம் இறைவனுக்கு அருகில் கொண்டு சேர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். அவனுக்கு முன் குனியச் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.....

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:

நிலைமைகள் எப்படியானாலும் சரி, உங்களுடைய ஈமான் சிறிதளவும் ஆட்டம் காணக் கூடாது. பிறகு, இவர்கள் கானிதாத் (எனப்படும் அல்லாஹ்வின் முன் குனிபவர்கள்) ஆக இருக்க வேண்டும். கட்டுப்படுதலில் முன்னேறியவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கட்டுப்படக்கூடிய பெண்களாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைகளுக்குக் கட்டுப்படக்கூடிய பெண்களாக இருக்க வேண்டும். ஜமாஅத் அமைப்புக்குக் கட்டுப்படக்கூடிய பெண்களாக இருக்க வேண்டும்.

நாம் ஓர் அமைப்பின் கீழ் செயல்படக் கூடியவர்களாக இருக்கும் போதுதான், நம்மால் முன்னேற்றம் காண முடியும். தாயிபாத் ஆக இருக்க வேண்டும். அதாவது, தவ்பா செய்யக் கூடிய பெண்களாக இருக்க வேண்டும். தங்களுடைய முந்தைய பாவங்கள், பிழைகள் ஆகியவற்றிற்கு இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருபவர்களாக இருக்க வேண்டும்.



'எல்லா முந்தைய பிழைகள் மற்றும் தவறுகளை விட்டும் பாதுகாப்பாக இருப்பதற்கு முயற்சி செய்வோம்' என்று இனிவரும் காலத்திற்காக உறுதியான எண்ணத்தை வெளிப்படுத்தக் கூடிய பெண்களாக இருக்க வேண்டும்.

பெண்கள் தங்களிடம் பல்வேறு வகையில் வழக்கத்தில் வந்து விட்ட எல்லா பித்அத்துகளை விட்டும் தவிர்ந்திருப்பதற்கு முயற்சி செய்யும் போது தான் உண்மையான தவ்பாவாக அது இருக்கும். நம்முடைய இந்த கிழக்கத்திய சமூகத்தில் ஒவ்வொரு பகுதியின், ஒவ்வொரு கோத்திரத்தின், ஒவ்வொரு குடும்பத்தின் பல்வேறு சம்பிரதாயங்கள் உள்ளன. அவை சிலவேளை சுமையாகி விடுகின்றன.

இந்த சுமைகளே பித்அத்களாகும். மார்க்கத்தின் ஓர் அங்கமாகவே ஆகி விட்டது போன்று, அந்த அளவுக்கு அவை கடைபிடிக்கப்படுகின்றன. ஆனால், மார்க்கமோ எளிமையைக் கற்றுக் கொடுக்கிறது. தமது ஈமான் உறுதி பெறுவதற்காக, அல்லாஹ்வுக்கு முன் இஸ்தி.ஃக்.ஃபார் செய்தவாறு, அவனிடம் உதவி கோரும் பெண்களாக இருக்க வேண்டும்.

ஆபிதாத் ஆக இருக்க வேண்டும். (அதாவது) அல்லாஹ்வை வணங்கக்கூடிய பெண்களாக இருக்க வேண்டும்..... சாலிஹாத் (எனப்படும் நற்செயல்கள் புரியக் கூடிய பெண்கள்) ஆக இருக்க வேண்டும். நோன்புகள் நோற்கக்கூடிய பெண்களாகவும், தமது ஆன்மிக தரத்தை மேம்படுத்துவதற்காக இறைவணக்கங்களின் பக்கம் கவனம் செலுத்தக்கூடிய பெண்களாகவும் இருக்க வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: ஆக, அஹ்மதி பெண்கள் இந்தத் தனிச்சிறப்புகளைக் கொண்டவர்களாக ஆகி விட்டார்கள் என்றால், ஒவ்வொரு நொடிப் பொழுதும், ஒவ்வொரு நேரமும் இறையிருப்பை அவர்கள் முன்னிறுத்தினால், எல்லா விதமான தீமைகளில் இருந்தும் தவிர்ந்திருக்கக் கூடியவர்களாக இருந்தார்கள் என்றால், நமக்கு அஹ்மதிய்யத்தின் வருங்கால சந்ததிகளின் ஒளிமையமான எதிர்காலத்திற்கான உத்திரவாதம் கிடைத்துக் கொண்டே இருக்கும். இன்ஷா அல்லாஹ்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்: "பெண்ணுக்கு அவளுடைய காலடியில் சொர்க்கம் இருக்கிறது என்ற அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதே அ(ந்த விஷயத்)தில், தாய்க்கு கண்ணியம் அளித்து சொர்க்கத்தை சம்பாதித்துக் கொள்ளுங்கள் என்று சந்திகளுக்கு மட்டும் கட்டளையி(டப்பட)வி)ல்லை. அதையும் தாண்டி, தாய்மார்களுக்கும், நீங்களும் அல்லாஹ் எடுத்துரைத்துள்ள அந்தத் தனிச்சிறப்புகளைக் கொண்டவர்களாக ஆகிவிடுங்கள் என்றும், உங்களுடைய சந்ததிகளுக்கும் அவர்கள் சொர்க்கத்தில் செல்லக்கூடியவர்களாக ஆகும் அளவுக்குத் தர்பிய்யத் வழங்குங்கள் என்றும் கட்டளை உள்ளது."

இப்பொழுது நான் எனது கட்டுரையின் இரண்டாவது அம்சத்தின் பக்கம் வருகிறேன். 'நம்பிக்கை கொண்ட பெண்கள் தற்காலத்தில் இந்தத் தனிச்சிறப்புகளை எப்படிப் பெறலாம்?'

ஹஸ்ரத் அமீருல் மு.ஃமினீன் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் Karlsruhe-வில் ஜூன் 29, 2013 அன்று நிகழ்த்திய சொற்பொழிவில் கூறினார்கள்:

"ஆக, எங்கு இந்த உலகம், ஓர் உலகவாதியைப் பொருத்தவரை அவரது வாழ்வின் நோக்கம் வேறு ஒன்றாக இருப்பதால், அவருக்கு இவ்வுலகம் இறைவனை விட்டு விலக்கக் கூடியதாக உள்ளது. அதே வேளையில், ஒரு நம்பிக்கையாளருக்கு இவ்வுலகம் அல்லாஹ்வின் அருட்களை ஈர்ப்பதற்கான வழிவகையாகும். ஒரு நம்பிக்கை கொண்ட ஆணாகட்டும் அல்லது பெண்ணாகட்டும் அவர்கள் அல்லாஹ்வின் பௌதிக, உலக அருள்களைப் பார்க்கும்போது அவற்றை வெறும் உலக ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான வழிமுறையாக மட்டும் ஆக்கிக் கொள்வதில்லை. அவர்கள் உலகவாதிகளைப் போன்று, 'நான் இதற்கு உரிமை உள்ளவனாக இருந்தேன் அல்லது உரிமை உள்ளவளாக இருந்தேன். ஆகவே தான், இவை அனைத்தும் எனக்குக் கிடைத்தன' என்று கூறுவதில்லை.

உலகத்தின் செல்வங்கள், சுக போகங்கள் மற்றும் வசதிகள் ஆகியவற்றிற்கான அனைத்து வழிவகைகளும், எவற்றிற்காக இறைவன் மனிதனைப் படைத்தானோ, அந்த உயர்வான நோக்கங்களை விட்டும் ஒரு நம்பிக்கை கொண்ட ஆணை அல்லது ஒரு நம்பிக்கை கொண்ட பெண்ணை கவனமற்றவர்களாக ஆக்குவதில்லை. மேலும், அவற்றில்

எல்லாவற்றையும் விடப் பெரிய நோக்கம் அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை நிறைவேற்றுவதாகும். இந்த அருட்கொடைகள் அதிகரிக்கும்போது ஒரு நம்பிக்கை கொண்ட ஆண் மற்றும் நம்பிக்கை கொண்ட பெண் இன்னும் அதிகம் அல்லாஹ்வுக்கு முன் குனிவார்கள்.

அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப, அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கான உரிமையை செலுத்தி அவனுடைய அருட்கொடைகளை நினைவு கூர்வார்கள். அவர்கள் அல்லாஹ் வழங்கிய செல்வத்தை தங்களை அலங்கரித்துக் கொள்வதற்கான ஏற்பாட்டைச் செய்து மட்டும் வெளிப்படுத்துவதில்லை. அதையும் தாண்டி அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்காக, இல்லாத தங்களுடைய சகோதர, சகோதரிகளுக்கான உரிமைகளையும் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்களில் இரத்த உறவிலான சகோதர, சகோதரிகள் மட்டுமே இருப்பதில்லை. அதற்கும் மேற்பட்டு, உறவினரல்லாத சகோதர சகோதரிகளும் இருப்பார்கள். அவர்களுக்கான உரிமைகளையும் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்களுக்கும் உதவி செய்வதற்கு முயற்சி செய்கிறார்கள்.''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பெண்களுக்கு வழங்கிய அறிவுரைகளில் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். உலகத்தின் மீதும், அதன் அழகின் மீதும் அதிகம் பற்று கொள்ளாதீர்கள். சமுதாய கர்வம் கொள்ளாதீர்கள். எந்த ஒரு பெண்ணையும் கேலி கிண்டல் செய்யாதீர்கள். கணவர்களிடம் அவர்களுடைய தகுதிக்கு அப்பாற்பட்ட விஷயங்களை எதிர்பார்க்காதீர்கள். நீங்கள் குற்றமற்றவர்களாகவும், தூய்மையான மக்களாக இருக்கும் நிலையிலும் கப்ருகளில் நுழைவதற்காக முயற்சி செய்யுங்கள். இறைவனுக்கான கடமைகளான தொழுகை, ஸக்காத் போன்றவற்றில் சோம்பல் காட்டாதீர்கள்.

உங்களுடைய கணவர்களுக்கு உள்ளத்தாலும் ஆன்மாவாலும் கட்டுப்படுங்கள். அவர்களுடைய கண்ணியத்தின் பெரும் பங்கு உங்களுடைய கைகளில் உள்ளது. எனவே, நீங்கள் உங்களுடைய அந்தப் பொறுப்பை, நீங்கள் இறைவனது பார்வையில் சாலிஹாத் மற்றும் கானிதாத்தில் கணக்கிடப்படுகின்ற அளவுக்கு உன்னதமாக நிறைவேற்ற வேண்டும். வீண் விரயம் செய்யாதீர்கள். கணவர்களுடைய செல்வங்களைத் தேவையில்லாத இடங்களில் செலவு செய்யாதீர்கள். நம்பிக்கை துரோகம் செய்யாதீர்கள். திருடாதீர்கள். குறை கூறாதீர்கள். ஒரு பெண் இன்னொரு பெண் மீதோ அல்லது ஆண் மீதோ அவதூறு கூற வேண்டாம்.'' (நூல்: கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 81)

(தொடரும்...)

# திருமண வரன்

ஹஸ்ரத் அபூ ஹாத்திம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களிடத்தில் ஒருவர் திருமண வரன் கேட்டு வந்தால், அவரது மார்க்கப் பற்று, நல்லொழுக்கம் உங்களுக்குப் பிடித்திருந்தால் அவருக்கு(உங்கள் பெண்ணை)த் திருமணம் செய்து கொடுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யவில்லை என்றால் பூமியில் குழப்பம் உருவாகி விடும். கேள்வி கேட்டவர் மீண்டும் கேள்வி கேட்க முயன்றார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று முறை உங்களிடத்தில் ஒருவர் (திருமண) சம்பந்தம் கொண்டு வந்தால், அவரது மார்க்கப் பற்று, நல்லொழுக்கம் போன்றவை உங்களுக்குப் பிடித்திருந்தால் அவருக்கு(உங்கள் பெண்ணை)த் திருமணம் செய்து கொடுங்கள் என்றே கூறினார்கள். (திர்மிதி – கிதாபுன் நிக்காஹ்)

இந்த ஹதீஸிற்கு விளக்கமளித்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகின்றார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள், ''பொருளாதாரத்தில் பலவீனம் இருந்தாலும், மார்க்கப் பற்றுள்ள ஆண்களைத் திருமணம் செய்து கொள்ளுங்கள். அவர்கள் மார்க்கத்தில் நிலைபெற்றிருந்தால் அல்லாஹ் அவர்களது பொருளாதார நிலையை மாற்றி விடுவான். இது அல்லாஹ்வின் வாக்குறுதி ஆகும்'' என்று கவனமூட்டியுள்ளார்கள். ஆகையால் பெண் பிள்ளைகளுக்கான சம்பந்தம் வரும்போது அதனை ஒத்திப் போடக் கூடாது. மாறாக மார்க்கப் பற்று திருப்திகரமாக இருந்தால் திருமணம் செய்து வைக்க வேண்டும். இதனைப் போன்று ஆண் பிள்ளைகளுக்கும் திருமணம் செய்யும்போது பெண்களின் வெளிப்படை(யான அழகு), உலக நிலை போன்றவற்றைப் பார்க்காதீர்கள். மாறாக அவர்களிடம் நன்மை எந்த அளவுக்கு உள்ளது என்பதைப் பாருங்கள் எனக் கூறினார்கள்.

## கேள்வி மற்றும் பதில்

# ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் வழிகாட்டல்





### ∴பிர்அவ்னின் மக்கள்

பிரான்சில் இருந்து ஒருவர் ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களுக்குக் கடிதம் எழுதி, பின்வரும் திருக்குர்ஆன் வசனம் பற்றி கேள்வி கேட்டார்:

فَوَقٰهُ اللّٰهُ سَيِّاٰتِ مَا مَكَرُوْا وَحَاقَ بِاٰلِ فِرْعَوْنَ سُوْٓءُ الْعَذَابِ ۚ
اَلنَّارُ يُعْرَضُوْنَ عَلَيْهَا غُدُوًّا وَّعَشِيًّا ۚ وَيَوْمَ تَقُوْمُ السَّاعَةُ ۗ
اَدْخِلُوْٓا اٰلَ فِرْعَوْنَ اَشَدَّ الْعَذَابِ

“ஆகவே அல்லாஹ் (நம்பிக்கை கொண்டிருந்த) அவரை (நிராகரிப்பாளர்களாகிய) அவர்கள் தீட்டிய திட்டங்களின் தீமைகளிலிருந்து காப்பாற்றினான். மேலும் ∴பிர்அவ்னைச் சேர்ந்தவர்களைக் கடுமையான தண்டனை சூழ்ந்து கொண்டது. அதாவது பகலிலும் இரவிலும் நெருப்பின் முன் அவர்கள் கொண்டு வரப்படுவர். குறிப்பிட்ட நேரம் வரும் நாளில் ∴பிர்அவ்னைச் சேர்ந்தவர்களை (ஆலி ∴பிர்அவ்னை) கடுமையான தண்டனைக்குள் நுழையச் செய்யுங்கள் (என்று வானவர்களிடம் கூறப்படும்).” (திருக்குர்ஆன் 40:46-47)

அவரது கேள்வி: “இந்த வசனத்தின் பின்னணியில், ∴பிர்அவ்னின் மக்களுக்கு ஏன் இவ்வளவு கடுமையான தண்டனை இருக்கிறது என்ற கேள்வி எழுகிறது, குறிப்பாக வல்லமையுள்ள அல்லாஹ்வின் கருணை மிகவும் விரிவானது. அந்தக் காலத்தில் ∴பிர்அவ்ன் மக்கள் செய்த ஒரு குறிப்பிட்ட குற்றம் இன்று வரை பரம்பரையாக அவர்களைத் தொடர்கிறதா? மேலும், ‘∴பிர்அவ்னின் மக்கள்’ (ஆலி ∴பிர்அவ்ன்) என்பது ∴பிர்அவ்னின் சந்ததியையும் பரம்பரையையும் குறிக்கிறதா அல்லது அது இஸ்ரவேல் கோத்திரத்தைக் குறிக்கிறதா?”

ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் செப்டம்பர் 16, 2022 தேதியிட்ட தமது கடிதத்தில் இந்தக் கேள்விக்கு பின்வரும் பதிலை வழங்கியுள்ளார்கள்:

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰلِكَ لِمَنْ يَّشَآءُ ۭ
وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ ضَلَّ ضَلٰلًۢا بَعِيْدًا

“அல்லாஹ் தனக்கு இணையாக எதையும் ஆக்கிக் கொள்வதை ஒருபோதும் மன்னிக்க மாட்டான். ஆனால் இதை விடக் குறைந்ததை தான் நாடியவருக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கு எதையாவது இணையாக ஆக்குகின்றவன் (நேரான பாதையிலிருந்து) வெகுதூரம் சென்று விட்டான் எனப் புரிந்து கொள்க.’ (திருக்குர்ஆன் 4:117)

அதேபோல், அவன் கூறுகிறான்:

اِنَّ الشِّرْكَ لَظُلْمٌ عَظِيْمٌ

‘நிச்சயமாக, (இறைவனுக்கு) இணை வைப்பது மாபெரும் அநீதியாகும்.’ (திருக்குர்ஆன் 31:14)

∴பிர்அவ்னின் குற்றம், அவன் ஷிர்க் செய்தது மட்டுமின்றி, அவன் இறைத்தன்மை தன்னிடம் இருப்பதாக வாதம் செய்து ஏராளமான மக்களை வழிதவறச் செய்து பெரும் பாவத்தைச் செய்தான். எனவே, வல்லமையுள்ள அல்லாஹ், திருக்குர்ஆனில், சூரா அல்-மு∴மினில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அந்த காலகட்டத்தில், அவனது ஆதரவாளர்களாகவும், கூட்டாளிகளாகவும் இருந்த, அவனது தீமைகளில் முழுமையாகப் பங்கேற்ற ∴பிர்அவ்னையும் அவனுடைய மக்களைப் பற்றியும் எச்சரித்துள்ளான். திருக்குர்ஆனின் போதனைகள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு மட்டும் நின்று விடாமல் இறுதிநாள் வரை வழிகாட்டியாக திகழ்கின்றன. எனவே, எதிர்காலத்தில், ∴பிர்அவ்னின் வழிகளைப் பின்பற்றி, அவனது அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களும் ∴பிர்அவ்னின் மக்களாகக்

கருதப்படுவார்கள், அதே தண்டனையை அனுபவிப்பார்கள் என்றும் வல்ல அல்லாஹ் இந்த வசனங்களில் சுட்டிக் காட்டியுள்ளான். இதனால்தான் குர்ஆன் ஃபிர்அவ்னுக்குப் பதிலாக 'ஆலி ஃபிர்அவ்ன்' (ஃபிர்அவ்னின் மக்கள்) என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளது.

எவ்வாறாயினும், இந்தத் தீமைகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொண்டு, வழிகாட்டுதலைப் பெறுபவர்கள், அவர்கள் ஃபிர்அவ்னின் உண்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி அல்லது அவனைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும் சரி, வல்ல அல்லாஹ் அந்தத் தண்டனையிலிருந்து அவர்களைப் பாதுகாப்பான். உண்மையில், ஃபிர்அவ்னின் அரசவையில் கூட, ஒரு நபர் ஃபிர்அவ்னையும் அவனது கூட்டாளிகளையும் உண்மையை ஏற்றுக்கொள்ளவும், மூஸா (அலை) அவர்களை எதிர்ப்பதில் இருந்து விலகி இருக்கவும் அறிவுறுத்தினார், அதனால் அவர்கள் அல்லாஹ்வின் கோபத்திலிருந்து காப்பாற்றப்படுவார்கள். திருக்குர்ஆன் இந்த நபரை 'நம்பிக்கையாளர்' (முஃமின்) என்று குறிப்பிடுகிறது மற்றும் அவரை مِّنْ اٰلِ فِرْعَوْنَ (ஃபிர்அவ்னின் மக்களைச் சார்ந்தவர்) என்றும் அடையாளப்படுத்தி உள்ளது. இந்த சம்பவம் சூரா அல்-முஃமின், வசனங்கள் 29 முதல் 34 வரை இவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது:

"ஃபிர்அவ்னின் சமுதாயத்தினருள் நம்பிக்கை கொண்டு அந்நம்பிக்கையை மறைத்து வைத்திருந்த ஒரு மனிதர் கூறினார்: என் இறைவன் அல்லாஹ் என்று கூறுகின்ற ஒரே காரணத்திற்காக நீங்கள் ஒரு மனிதரைக் கொலை செய்யப் போகின்றீர்களா? மேலும் அவர் உங்கள் இறைவனிடமிருந்து உங்களிடம் தெளிவான சான்றுகளையும் கொண்டு வந்துள்ளார். அவர் பொய்யராக இருந்தால், அவரது பொய்யினால் விளையும் தீங்கு அவரையே சாரும். ஆனால் அவர் உண்மையாளராயின், அவர் உங்களுக்கு முன்னறிவித்தவைகளுள் சில தண்டனைகள் உங்களுக்கும் நேரும். நிச்சயமாக வரம்பகளை மீறுபவனுக்கும் பெரும் பொய்யனுக்கும் அல்லாஹ் நேர்வழி காட்டமாட்டான். என் சமுதாயத்தினரே! இந்நாட்டில் அதிகாரமுள்ளவர்களாக இருக்கின்ற அளவுக்கு ஆட்சி இன்று உங்களிடம் உள்ளது. ஆனால் அலல்லாஹ்வின் தண்டனை நம்மிடம் வந்தால், அதற்கெதிராக நமக்கு எவன் உதவி செய்வான்? ஃபிர்அவ்ன் கூறினான்: நான் (சரி என்று) காண்பதையே உங்களுக்குத் தெரிவித்து, நேர்மையான வழியையே நான் உங்களுக்குக் காட்டுகின்றேன். நம்பிக்கை கொண்டிருந்தவர் கூறினார்: என் சமுதாயத்தினரே! (முற்காலத்திலுள்ள) மக்களுக்கு வந்தது போன்ற (தண்டனையின்) நாள் உங்களுக்கு வருவது குறித்து நான் அஞ்சுகிறேன். நூஹின்



சமுதாயத்தினர் மற்றும் ஆது, ஸமூது அவர்களுக்குப் பின்னுள்ளவர்கள் ஆகியவர்களுக்கு ஏற்பட்ட நிலை போல் (அந்நாள் இருக்கும்). அல்லாஹ் தன் அடியார்களுக்கு அநீதி இழைக்க நாடுவதில்லை. என் சமுதாயத்தினரே! (உதவிக்காக அழுது) ஒருவரை ஒருவர் அழைக்கும் நாளைக் குறித்தும் நான் உங்களுக்காகப் பயப்படுகின்றேன். நீங்கள் புறங்காட்டி விரைந்தோடும் அந்நாளில் அல்லாஹ்வுக்கெதிராகக் காப்பாற்றுபவர் எவரும் உங்களுக்கு இருக்கமாட்டார். வழிகேட்டில் செல்ல அல்லாஹ்வால் விடப்பட்டவனுக்கு வழிகாட்டுபவர் எவரும் இல்லை." (திருக்குர்ஆன் 40:29-34)

எனவே, மேன்மையுள்ள அல்லாஹ் யாரையும் காரணமின்றி தண்டிப்பதுமில்லை, ஷிர்க் போன்ற பெரும் அநீதியைச் செய்பவன் அவனுடைய தண்டனையில் இருந்து தப்பவும் முடியாது. எனவே, வல்லமையுள்ள அல்லாஹ் இந்தக் கடுமையான பாவத்தில் ஈடுபட்டுள்ள ஃபிர்அவ்னுக்கும் அவனது மக்களுக்கும் அல்லது எதிர்காலத்தில் ஃபிர்அவ்னின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவனது 'ஆல்' அதாவது குடும்பமாக மாறப்போகும் மக்களுக்கும் இந்தக் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளான்.

**- A. நாஸிர் அஹ்மது**

# ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்)

தமிழாக்கம்: மவ்லவி M.B. தாஹிர் அஹ்மது

கூஃபா ஓர் அழகிய நகரமாகும். அரபு நாட்டினுடைய முஸ்லிம்கள் அதிகம் முன்னேறிய போது அங்கு மக்கள் தொகையும் அதிகரிக்கத் தொடங்கியது. அப்போது ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரழி) அவர்கள் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதினார்கள். அதில் முஸ்லிம்களுக்கு என ஒரு நகரத்தை உருவாக்குமாறு கூறினார்கள். ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நெருங்கிய தோழர்களில் ஒருவராக இருந்தார்கள். வலுவான கிஸ்ராவின் ஆட்சி அன்னாரின் கைகளினால்தான் வெற்றி கொள்ளப்பட்டது. அன்னார் முஸ்லிம்களுக்கான நகரத்தைக் கட்டமைப்பதற்கு கூஃபாவின் பூமியைத் தேர்ந்தெடுத்தார்கள். ஹிஜ்ரி 17-ஆம் ஆண்டில் இந்த நகருக்கான அடித்தளம் இடப்பட்டது. மிகவும் எளிமையான, சாதாரணமான வீடுகள் கட்டப்பட்டன. அரபு நாட்டின் பல்வேறு கோத்திரங்கள் இந்த நகரில் வந்து குடி அமரத் தொடங்கினர். சிறிது நாட்களிலேயே இந்த நகரமானது மிகவும் புகழ் பெற்று விட்டது. ஹஸ்ரத் அலீ (ரழி) அவர்கள் இந்த நகரை தாருல் கிலாஃபத் அதாவது கிலாஃபத்தின் தலைமையகமாக்கினார்கள். இந்த நகரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபிகளும் தங்களின் வசிப்பிடமாக ஆக்கிக் கொண்டார்கள்.




இந்த சான்றோர்களின் காரணத்தினால் கண்ணியத்திற்குரிய மக்கா மற்றும் மதீனா நகரங்களைப் போன்று கூஃபா நகரமும் தாருல் இல்ம் என்று அதாவது ஞானத்தின் உறைவிடம் என்ற அந்தஸ்தைப் பெற்றது.

இந்த ஞானத்தின் உறைவிடமாகிய கூஃபா நகரில்தான் நம்முடைய அன்பிற்குரிய சான்றோர் ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்கள் ஹிஜ்ரி 80-ஆம் ஆண்டில் பிறந்தார்கள். ஹிஜ்ரி 80-ஆம் ஆண்டில் அப்துல் மலிக் பின் மர்வான் உடைய ஆட்சி இருந்தது. இந்தக் காலமானது ஆரம்ப காலம் என்று அழைக்கப்படுகின்றது. இந்த ஆரம்ப காலமானது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஸஹாபா (ரழி) அவர்களின் காலமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சில சஹாபிகள் இருந்த அந்த அருளுக்குரிய காலகட்டத்தை இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்களும் பெற்றார்கள்.

ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீஃபா அவர்களின் உண்மையான பெயர் நுஃமான் ஆகும். அன்னார் மிதமான உயரம் உடையவர்களாகவும் அழகிய முகம் கொண்டவராகவும் இருந்தார்கள். அன்னாரின் பாட்டனாரின் பெயர் ஸவ்த்தி ஆகும். தந்தையாரின் பெயர் சாபித் ஆகும். அன்னாரின் குடும்பம் ஈரானின் ஒரு புகழ்பெற்ற கண்ணியத்திற்குரிய குடும்பம் ஆகும். ஈரானில் இஸ்லாம் பரவத் தொடங்கியபோது அன்னாரின் பாட்டனார் ஸவ்த்தி அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். வீட்டில் உள்ளவர்களும், குடும்பத்தில் உள்ளவர்களும் கோபத்தை வெளிப்படுத்தியபோது அன்னார் அனைத்தையும் விட்டு விட்டு அரபு நாட்டிற்கு வந்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அலீ (ரழி) அவர்களின் ஆட்சிக் காலமாக இருந்தது. அன்னாரின் பாட்டனார் கூஃபாவிலேயே தங்கி விட்டார்கள். அங்குதான் ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்களின் தந்தை சாபித் அவர்களும் பிறந்தார்கள். அவர்களை ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்களின் பாட்டனார் ஹஸ்ரத் அலீ (ரழி) அவர்களிடத்தில் அழைத்துச் சென்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரழி) அவர்கள், அவர்களைக் கொஞ்சினார்கள். அவர்களுக்காக துஆ செய்தார்கள். அன்னாரின் தந்தையார் வியாபாரம் செய்து வந்தார்கள். ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்களின் பிறப்பின் போது அன்னாரின் தந்தையாரின் வயது 40 ஆக இருந்தது. ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீஃபா அவர்களின் குழந்தைப் பருவத்தில் அரபு நாட்டின் அரசியல் சூழ்நிலைகள் மிகவும் மோசமாக இருந்தன. அப்துல் மலிக் பின் மர்வான் ஹுஜ்ஜாஜ் பின் யூசுஃப் என்பவரை ஈராக்கின் ஆளுநராக நியமித்தார்கள். ஹுஜ்ஜாஜ் பின் யூசுஃப் மிகவும் அநீதி இழைக்கக்கூடிய ஆளுநராக

இருந்தான். அப்துல் மலிக் பின் மர்வானின் மகன் வலீது அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஹிஜ்ரி 95-ஆம் ஆண்டில் அவன் மரணம் அடைந்தான். அதற்கு ஓராண்டிற்குப் பிறகு வலீதும் காலம் சென்றார்.

இமாம் அபூ ஹனீ∴பா அவர்களின் முழு குழந்தைப் பருவமும் நாட்டின் அரசியல் நிலைமைகள் மிகவும் மோசமாக இருந்த காலகட்டத்திலேயே கழிந்தது. அமைதி இருக்கவில்லை. திருக்குர்ஆனை மனனம் செய்த பிறகு அன்னார் மார்க்க அறிவைக் கற்றுக் கொண்டிருந்தார்கள். அறிவு சார்ந்த விவாதங்களும் செய்து வந்தார்கள். ஒரு நாள் என்ன நிகழ்ந்தது என்றால், அது ஹுஜ்ஜாஜ் பின் யூசு∴பின். காலமாக இருந்தது. இமாம் ஸாஹிப் விவாதத்தில் மூழ்கி இருந்தார்கள். ஒரு நபர் அன்னாரிடத்தில் முற்றிலும் மார்க்கம் தொடர்பான ஒரு விவகாரத்தை வினவினார். அப்போது அன்னார் முழுமையான முறையில் மார்க்க அறிவைப் பெற்றிருக்கவில்லை. எனவே அந்த நபருக்கு எந்த பதிலும் கொடுக்க இயலவில்லை. அதற்கு அந்த நபர் நீங்கள் பெரும் பெரும் விவாதங்கள் செய்கின்றீர்கள். ஆனால் ஒரு மார்க்க விஷயம் தொடர்பாக உங்களுக்குத் தெரியவில்லையே என்றார். இதைக் கேட்டு இமாம் ஸாஹிப் (ரஹி) அவர்கள் மிகுந்த தலைகுனிவிற்கு ஆளானார்கள். மேலும் இப்பொழுது நான் மார்க்க அறிவைப் பெறுவேன் என்ற உறுதி கொண்டார்கள்.

வலீதின் மரணத்திற்குப் பிறகு ஆட்சியானது சுலைமான் பின் அப்தில் மலிக்கின் வசம் வந்தது. அவர் வலீதினுடைய உடன் பிறந்த சகோதரர் ஆவார். மிகவும் நல்ல, அறிவை நேசிக்கக் கூடிய மனிதராக இருந்தார். அவருடைய மிகப்பெரிய சாதனை என்னவென்றால் அவர் உமர் பின் அப்தில் அஸீஸ் (ரஹி) அவர்களைத் தனது சிறப்பான ஆலோசகராக ஆக்கிக் கொண்டார். தன் சகோதரன் மற்றும் மகன்கள் இருந்தும் கூட அவர் ஹஸ்ரத் உமர் பின் அப்தில் அஸீஸ் அவர்களை ஆளுநராக ஆக்கினார். சுலைமான் பின் அப்தில் மலிக்கின் ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு மார்க்க மற்றும் அறிவு சார்ந்த கலந்துரையாடலின் பக்கம் கவனம் ஏற்பட்டது. இமாம் அபூ ஹனீ∴பா (ரஹி) அவர்களின் உள்ளத்திலும் மார்க்க அறிவைப் பெறுவதற்கான குறிப்பான ஆர்வம் உருவாகியிருந்தது. விவாதங்களினால் அன்னாரின் இயல்பு கலைப்படைந்திருந்தது. அப்பொழுது அன்னாரின் வயது 17 ஆகும். அன்னார் தன் தந்தையாரைப் போன்று வியாபாரம் செய்து வந்தார்கள். தனது நேர்மையின் காரணத்தினால் அன்னார் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றத்தைப் பெற்றார்கள்.

ஒரு நாள் ஏதோ வியாபாரப் பணிகள் தொடர்பாக கடைவீதிக்குச் செல்வதற்காக வீட்டை விட்டு கிளம்பினார்கள். வழியில் இமாம் ஷா∴பி அவர்களின் வீடு இருந்தது. அவர் கூ∴பா நாரின் ஒரு மிகப்பெரிய இமாமாக இருந்தார்கள். இமாம் ஷஅபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அபூ ஹனீ∴பா ரஹிமஹுல்லாஹ் அவர்களைப் பார்த்ததும் தன் அருகே அழைத்து, எங்கே செல்கிறீர்கள் என்று வினவினார்கள். நான் வியாபாரப் பணிகளுக்காக கடைவீதியில் ஒரு வியாபாரியிடம் செல்கிறேன் என்று அன்னார் பதிலளித்தார்கள். இமாம் ஷஅபி (ரஹி) அவர்கள் மீண்டும், நீங்கள் யாரிடத்தில் படிக்கின்றீர்கள் என்றுதான் நான் கேட்கிறேன் என்றார்கள். அதற்கு அன்னார் நான் எவரிடமும் படிக்கவில்லை என்று பதில் அளித்தார்கள். இமாம் ஷஅபி (ரஹி) அவர்கள், “நீங்கள் ஆலிம் பெருமக்களோடு அமருங்கள் அறிவைப் பெறுங்கள்” என்று கூறினார்கள்.

அசல் விஷயம் என்னவாக இருந்தது என்றால் ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீ∴பா (ரஹி) அவர்களுடைய தோற்றத்திலிருந்து அன்னார் வியாபாரியாகவே தெரியவில்லை. அன்னார் வீணான உரையாடல்களில் ஒருபோதும் ஈடுபடுவதில்லை. எவரேனும் ஏதேனும் கேள்வி கேட்டால் மிகுந்த கண்ணியத்தோடு அவருக்கு பதில் அளிப்பார்கள். அதனால் அன்னாரைப் பார்ப்பவர்கள் அனைவரும் அவர்களை வியாபாரியாக இல்லாமல் அன்னாரை மாணவன் என்றே கருதி வந்தனர். இமாம் ஷஅபி (ரஹி) அவர்களுடைய இந்த அறிவுரையானது அன்னாரின் உள்ளத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இனி நான் ஆலிம் பெருமக்களோடு அமர்ந்து மார்க்க அறிவைப் பெறுவேன் என்று உள்ளத்திலேயே ஓர் உறுதியான எண்ணம் கொண்டார்கள்.

மாணவர்களின் பாதையில் மலக்குமார்கள் தங்களுடைய இறக்கைகளை விரித்து விடுகின்றனர் என்ற ஹதீஸை நாம் கேள்விப்பட்டிருப்போம். அதன் பொருள் என்னவென்றால், எந்த மனிதர் அறிவைப் பெற விரும்புகிறாரோ அல்லாஹ் அவருக்குத் தன்னுடைய மலக்குமார்கள் மூலமாக உதவி செய்கின்றான் என்பதாகும். ஹஸ்ரத் இமாம் சாஹிப் அவர்களும் அல்லாஹ்வினுடைய அருள் மற்றும் உதவியோடு அறிவைப் பெறத் தொடங்கினார்கள். அந்தக் காலத்தில் ஆசிரியர் ஏதேனும் ஒரு விவகாரத்தின் மீது மாணவர்கள் முன்பு சொற்பொழிவாற்றுவார்கள். பிறகு அதில் மாணவர்களுக்கு என்ன விஷயம் புரியவில்லையோ அவர்கள் அதைக் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். அத்தோடு அதை எழுதியும் கொள்வார்கள். இதுவே அந்தக் காலத்தில் கற்பதற்கான வழிமுறையாக இருந்தது.

கூ∴பா நகரில் இமாம் ஹம்மாது (ரஹி) அவர்களின் பாடசாலை மிகவும் பிரசித்தி பெற்றதாக இருந்தது. இமாம் ஹஸ்ரத் அபூ ஹனீ∴பா (ரஹி) அவர்களும் இந்த பாடசாலையையே தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

ஃபிக்ஹா அதாவது மார்க்கச் சட்டக் கல்வியைப் பயின்றார்கள். இப்பொழுது ஃபிக்ஹா மார்க்கச் சட்டக் கல்வி என்றால் என்ன என்பது தொடர்பாக சுருக்கமாக பார்ப்போம்.

அல்லாஹ் அனைத்து மனிதர்களுக்கும் நேர்வழியை வழங்குவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அனுப்பினான். அன்னாரின் மீது திருக்குர்ஆன் எனும் முழுமையான வேதத்தை இறக்கினான். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். திருக்குர்ஆனின் மூலமாக அல்லாஹ் அனைத்து உலக மக்களுக்கும் ஓர் அழகிய கடிதத்தை எழுதியுள்ளான். நான் அந்தக் கடிதத்தை உங்களுக்கு படித்துக் காட்ட வேண்டும். உங்களுக்குப் புரிய வைக்க வேண்டும் என்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளேன். இப்பொழுது நான் கூறுகின்ற அல்லது நான் செய்கின்ற அமல்கள் இறைவனுடைய கட்டளைக்கு ஏற்ப இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மார்க்க அல்லது உலக விவகாரங்களில் உங்களுக்கு ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் திருக்குர்ஆன் மற்றும் என்னுடைய கூற்று மற்றும் செயல்களின் மூலமாக அந்தப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டு கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவன் புறமிருந்து வஹீ அதாவது இறை வெளிப்பாடு இறங்கினால் அதை அன்னார் மக்களுக்கு வாயளவிலும் புரிய வைப்பார்கள். பிறகு அதற்கேற்ப அமல் செய்தும் வழி நடத்தி வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுடைய மரணத்திற்குப் பிறகும் கூட எப்பொழுதெல்லாம் ஏதேனும் விவகாரம் முன் வருமோ சஹாபா பெருமக்கள் அது தொடர்பாக திருக்குர்ஆனில் என்ன கட்டளை உள்ளது. பெருமானார் (ஸல்) அவர்கள் என்ன கூறியுள்ளார்கள். அன்னாருடைய அமல் இது தொடர்பாக எவ்வாறு இருந்தது என்று ஆராய்ந்து வந்தார்கள். இவ்வாறு திருக்குர்ஆன், சுன்னத் மற்றும் ஹதீஸின் ஒளியில் தங்களுடைய அறிவைக் கொண்டு பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு வந்தார்கள்.

எனவே இப்பொழுது ஃபிக்ஹா அதாவது மார்க்கச் சட்ட அறிவு என்பது திருக்குர்ஆன் ஹதீஸின் ஒளியில் பல்வேறு வகையான பிரச்சனைகளுக்கான தீர்வு என்பதை அறிந்திருப்பீர்கள். உதாரணத்திற்கு இவ்வாறு உளு செய்ய வேண்டும். இவ்வாறு தொழ வேண்டும் இவ்வாறு ஸக்காத், நோன்பு, ஹஜ், நிக்காஹ், கொடுக்கல் வாங்கல் ,வாரிசு உரிமைகள் மற்றும் தினசரி விவகாரங்கள் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். குழந்தை பிறந்ததிலிருந்து அது மரணம் அடையும் வரையிலான விவகாரங்களுக்கான தீர்வு ஃபிக்ஹா எனும் மார்க்கச் சட்ட அறிவின் மூலமாக கூறப்பட்டிருக்கின்றது.

ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீஃபா (ரஹி) அவர்கள் மார்க்கச் சட்டக் கல்வியைப் பயின்றார்கள். இந்தக் கல்வியைப் பெறுவதற்கு திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ் தொடர்பான சிறந்த அறிவு இருக்க வேண்டும். எனவே அன்னார் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸை நன்கு பயின்றார்கள். எந்த அளவுக்கு என்றால் கூஃபா நகரில் அன்னார் பாடம் பயிலாத எந்த ஒரு ஹதீஸ் வல்லுனரும் இருக்கவில்லை. அதாவது அனைத்து ஹதீஸ் வல்லுனர்களிடமிருந்தும் கல்வி கற்றார்கள். அதேபோல் ஹதீஸ் தொடர்பான அறிவைப் பெறுவதற்கு அன்னார் பஸ்ரா, சிரியா போன்ற இடங்களுக்கும் சென்றார்கள். அன்னார் இமாம் ஹம்மாது (ரஹி) அவர்கள் தவிர ஹஸ்ரத் இமாம் ஜஅஃபர் சாதிக் (ரஹி) அவர்களிட -மிருந்தும் கற்றார்கள். இமாம் ஹம்மாதிடமிருந்து எந்த அளவுக்கு மார்க்கச் சட்டத்தைப் பயின்றார்கள் என்றால் ஒரு முறை இமாம் ஹம்மாது (ரஹி) கூறினார்கள்:



“அபூஹனீஃபாவே! நீ என்னை காலி ஆக்கி விட்டாய்.”

அதாவது என்னிடத்தில் எந்த அளவு ஞானம் இருந்ததோ அவைகள் அனைத்தையும் நீ பெற்றுக் கொண்டாய். அன்னாரின் ஆசிரியர் இமாம் ஹம்மாது (ரஹி) அவர்கள் அன்னாரை மிகவும் நேசித்து வந்தார்கள். ஒரு முறை இமாம் ஹம்மாது (ரஹி) அவர்கள் பயணத்தில் சென்றிருந்தார்கள். சில நாட்களுக்குப் பிறகு திரும்பி வந்தபோது அவர்களின் மகன் இஸ்மாயீல் அவர்கள் தந்தையிடம் தந்தையே! உங்களுக்கு எல்லாரையும் விட யாரைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகமாக இருந்தது என வினவினார். அதற்கு அவர்கள், அபூ ஹனீஃபாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அதிகமாக இருந்தது என பதில் அளித்தார்கள். இமாம் அபூ ஹனீஃபா அவர்கள் மீதான அன்பு மற்றும் அன்னாரின் அறிவு, புத்திக் கூர்மையின் காரணமாக ஒருமுறை இமாம் ஹம்மாத் (ரஹி) அவர்கள் பயணத்தில் சென்ற பொழுது தன்னுடைய இடத்தில் இமாம் அபூ ஹனீஃபாவை அமர்த்திச் சென்றார்கள்.

(தொடரும்...)




திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

مَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ كَمَثَلِ حَبَّةٍ اَنْۢبَتَتْ
سَبْعَ سَنَابِلَ فِيْ كُلِّ سُنْۢبُلَةٍ مِّائَةُ حَبَّةٍ ؕ وَاللّٰهُ يُضٰعِفُ
لِمَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ

அல்லாஹ்வின் வழியில் தனது செல்வத்தை தியாகம் செய்யக் கூடியவரின் உதாரணம் ஒரு விதையைப் போன்றது. அது ஏழு கதிர்களை முளைக்கச் செய்கிறது. ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியங்கள் இருக்கும். அல்லாஹ் தான் விரும்பக்கூடியவருக்கு (இதனை விட) அதிகமாக வழங்குகின்றான். அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், மிக்க அறிபவனும் ஆவான். (2:262)

وَمَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ
وَتَثْبِيْتًا مِّنْ اَنْفُسِهِمْ كَمَثَلِ جَنَّةٍۢ بِرَبْوَةٍ اَصَابَهَا وَابِلٌ
فَاٰتَتْ اُكُلَهَا ضِعْفَيْنِ ۚ فَاِنْ لَّمْ يُصِبْهَا وَابِلٌ فَطَلٌّ ؕ
وَاللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ

தங்களின் செல்வத்தை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும், தனது ஆன்மாவில் சிலவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் செலவு செய்யக் கூடியவர்களின் உதாரணம் உயரமான இடத்தில் உள்ள தோட்டத்திற்கு ஒப்பானது. அதன் மீது கனமழை பெய்தால் அது தனது கனியை அதிக அளவில் தருகிறது. கனமழை பொழியவில்லை என்றால், மிகக் குறைவான மழையே போதுமானது. அல்லாஹ் நீங்கள் செய்து கொண்டிருப்பவற்றை நன்கு பார்க்கக் கூடியவனாவான். (2:266)

இந்த இரண்டு வசனங்களில் அல்லாஹ் மிகத் தெளிவாகக் கூறியுள்ளதாவது, அல்லாஹ்வின் வழியில் செல்வத்தை செலவிடக் கூடியவர்களின் செல்வம் செலவு செய்ததன் விளைவாக வீணாகாது; மேலும் அவர் ஒருபோதும் நஷ்டத்திற்கு ஆளாக மாட்டார். மாறாக, அவரது செல்வத்தில் அசாதாரண அருள் ஏற்படும். எவ்வாறென்றால் பூமியில் ஒரு விதையை விதைத்ததன் விளைவாக அதில் ஏழு கதிர்கள் வெளிப்படும். மேலும் ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியங்கள் இருந்தால் ஏழு கதிரில் எழுநூறு தானியங்கள் வெளிப்படும். இன்னும் கூறுவதென்றால், அல்லாஹ் விரும்பினால் அதனை விட அதிகம் வெளிப்படுத்துவான். இன்றைய அறிவியல் காலகட்டத்தில் ஒரு கதிரிலிருந்து பல நூறு தானியங்கள் முளைக்க வைக்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆக, அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற விரும்பினால், ஏதாவது நல்ல காரியங்களில் செல்வத்தை செலவு செய்தால் உங்களுடைய செல்வம் குறையாது என்று நம்பிக்கையூட்டுகிறான். மேலும் அது ஒருபோதும் வீணாகாது; உங்களது வியாபாரமும் வீணாகாது; உங்களுக்கு இழப்பும் ஏற்படாது. மாறாக ஒவ்வொரு செயலிலும் அசாதாரண அருள் ஏற்படும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் உங்களை எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. எனவே இறைவன் உங்களுடைய செயல்களைப் பார்க்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மேலும் நீங்கள் உங்களது செல்வங்கள் மற்றும் உயிர்களைக் கொண்டு அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காக இறைவன் உங்களை அழைக்கின்றான். ஆகவே, நீங்கள் கட்டுப்படுவீர்களா? மேலும் உங்களில் இறைவனுக்கு யார் உதவி செய்கின்றார்களோ அவருக்கு இறைவன் உதவி செய்வான். மேலும் அவர் இறைவனுக்கு வழங்கியதை விட அதிகமாக இறைவன் அவருக்கு திருப்பிக் கொடுப்பான். மேலும் அவன் நன்மை செய்பவர்கள் அனைவரையும் விட சிறந்தவன் ஆவான். (மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 153)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இஸ்லாத்தின் வெளியீட்டுப் பணிகள், ஜமாஅத்தின் நிர்வாகம், கல்வி மற்றும் தர்பிய்யத் பணிகளைச் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் நோக்கத்திற்கு ஏற்ப ஜமாஅத்தின் உறுப்பினர்கள் மீது பொருளாதார ரீதியிலான சில உதவிகளைக் கடமையாக ஆக்கினார்கள். அவற்றுள் சில கட்டாயச் சந்தாக்கள் ஆகும். மேலும் சில விருப்பச் சந்தாக்களும்

இருக்கின்றன. கட்டாயச் சந்தாக்களில் குறிப்பாக ஸக்காத், வஸிய்யத் சந்தா, சந்தா ஆம், ஜல்ஸா ஸாலானா சந்தா ஆகியவை அடங்கும். சந்தா ஆம் என்பது சம்பாதிக்கின்ற ஒவ்வொரு ஆண் அல்லது பெண் மீதும் அதாவது அவர் வஸிய்யத் செய்திருக்கவில்லை என்றால் தனது மாத வருமானத்தில் பதினாறில் ஒரு பங்கை இஸ்லாத்தின் வெளியீட்டுப் பணிகளுக்காக சந்தாவாகக் கொடுக்க வேண்டும். அதே போன்று ஜல்ஸா ஸாலானா சந்தா என்பது ஒருவர் வஸிய்யத் செய்திருந்தாலும், செய்யாவிட்டாலும் சரியே. அவர் தனது ஆண்டு வருமானத்தின் 120-ல் ஒரு பங்கை சந்தாவாகக் கொடுப்பதாகும்.

ஆக, ஒவ்வொர் அஹ்மதியும் அவர் ஆணாக இருக்கட்டும் அல்லது பெண்ணாக இருக்கட்டும். அவர் மேற்கூறப்பட்ட விகிதாச்சாரப்படி சந்தா ஆம் மற்றும் ஜல்ஸா ஸாலானா சந்தா வழங்குபவராக இருக்கின்றார் என்றால், அவர் விகிதாச்சாரப்படி கொடுப்பவர் என்று அழைக்கப்படுவார். எனவே நாம் அல்லாஹ்வின் வழியில் எந்த அளவுக்கு பொருள் தியாகம் செய்கின்றோம்; நமது தியாகத்தின் தரம் என்ன? நமது சந்தா விகிதாச்சாரப்படி இருக்கின்றதா? மேலும் முறையாகச் செலுத்தி வருகின்றோமா? என்பதையும் கண்காணிக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறில்லையென்றால், நாம் நம் மீது அநீதியிழைத்துக் கொள்கிறோம் என்று பொருள். நமது இம்மையையும், மறுமையையும் நாம் சீர்கெடுக்கின்றோம். நாம் பொருள் தியாகத்தின் உரிமையைச் செலுத்த -வில்லை என்றால் மிகப் பெரிய நன்மையில் இருந்தும் இறைவனின் அருட்களிலிருந்தும் விலக்கப்பட்டவர்களாக நாம் இருக்கின்றோம். மேலும் அதன் அபாயகரமான விளைவுகளை எண்ணிப் பார்க்கும்போது உள்ளம் நடுங்குகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:

எவர் ஒருவர் இறைவனது மார்க்கத்தின் தொண்டிற்காக சிறிது வழங்குகிறாரோ அவர் இறைவனிடம் வியாபாரத்தை மேற்கொள்கிறார். மேலும் அந்த உடன்படிக்கையை முழுமைப்படுத்தாத பட்சத்தில் இறைவனுக்கு பதிலளிக்க வேண்டியது இருக்கின்றது. மேலும் எந்த அளவுக்கு குறைவு இருக்கின்றதோ அது அவருடைய பெயரில் பாக்கியாக உள்ளது. ஒருவேளை அவர் இவ்வுலகில் அதனை செலுத்தவில்லை என்றால், இறைவன் முன் கொண்டு வரப்படும்போது இறைவன் நரகத்தில் பாக்கியைச் செலுத்தி விட்டு வா என்று கூறுவான். (1933-ஆம் ஆண்டு மஜ்லிஸே முஷாவரத்தில் ஆற்றிய உரை)

சய்யிதுனா
ஹஸ்ரத் அமீருல் முஃமினீன்
அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்
அவர்கள் கூறுகிறார்கள்:

திருமணம் என்பது எப்படிப்பட்ட கடமை என்றால், அது வெறும் உலக நோக்கத்தை நிறைவேற்றுவது மட்டுமல்ல. மாறாக மார்க்கத் தேவையையும் நிறைவேற்றுவ –தாகும். ஆணும், பெண்ணும் திருமணம் செய்யும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனின் போதனைகளில் எந்தப் போதனையின் பக்கம் கவனமூட்டி –னார்களோ அதில், இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள்; இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள் என்றே மீண்டும் மீண்டும் வந்துள்ளது. ஆக, இதிலிருந்து இது வெறும் உலக பந்தம் இல்லை. மாறாக, இது ஒரு முக்கியமான நோக்கமாகும். அதாவது இறையச்சத்தின்படி செயல்பட்டு அல்லாஹ்வின் விருப்பத்திற்குக் காரணமாக அமையக் கூடியதாகும். வருங்கால சந்ததிகளுக்கு மார்க்கத்தின் பக்கம் ஆர்வமூட்டக் கூடியதாகும். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதன் பக்கம் கவனமூட்டக் கூடியதாகும் எனத் தெரிகிறது.

ஆக, திருமணம் இறையச்சத்தின் மூலமே நிலைபெறுகிறது என்பதை ஒவ்வோர் ஆணும் பெண்ணும் எப்போதும் கண்முன் வைக்க வேண்டும். இறையச்சம் என்பது ஒருவர் மற்றவருடைய உணர்வுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவருடைய உறவினர்களின் உணர்வுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்; உண்மையில் நிலைபெற்றிருக்க வேண்டும். நாம் நமது சந்ததிகளுக்காக நன்மையில் நிலைபெற்றிருந்தால்தான் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறக் கூடியவர்கள் ஆவோம். மேலும் வருங்காலத்தில் இந்த உலக நன்மைகள்தான் நமக்குப் பயனளிக்கும் என்பதை கவனத்தில் கொள்வதாகும்.

(நிக்காஹ் குத்பா பிப்ரவரி 9, 2014)



# பாலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதி




## ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் ஜுமுஆ உரைகளிலிருந்து...

- *பாலஸ்தீனில் பெண்களும் குழந்தைகளும் அநீதியின் உரலில் அரைக்கப்படுகின்றனர். அவர்களை எப்போதும் துஆக்களில் நினைவில் கொள்ளுங்கள்.*
- *அநீதியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக உங்களது வட்டத்தில் நீங்கள் முயற்சி செய்து வர வேண்டும்.*
- *உலகப் போர் தற்போது முன்னால் இருப்பதாகவே தென்படுகிறது.*

தற்போது நான் மீண்டும் உலகின் சூழலின் காரணமாக துஆவிற்காக கூற விரும்புகின்றேன். பழிதீர்ப்பதற்கும் ஓர் எல்லை இருக்கின்றது என்று மேற்கத்திய நாடுகளின், இன்னும் கூறப்போனால், அமெரிக்காவின் சில பத்திரிகைகளில் எழுதுபவர்கள் கூட தற்போது எழுதுகின்றார்கள். மேலும் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுடைய போரில் தங்களது பங்களிப்பைக் காட்ட நினைக்கின்றன. மேலும் சமாதானம் மற்றும் போரை நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஆனால் தெரிய வருவது என்னவென்றால், எழுதுபவர்கள் எழுதுகிறார்கள்: இந்த மக்கள் போரை நிறுத்துவதற்குப் பகரமாக அதை மூட்டுவதில் தீவிரமாக இருக்கின்றனர். அமெரிக்காவில் நேற்றும் செய்தி வந்தது. இது எல்லையைக் கடந்து விட்டது என்று கூறியவாறு வெளியுறவுத் துறையின் ஒரு மிகப் பெரிய அதிகாரி ராஜினாமா செய்துள்ளார். பாலஸ்தீனிய அப்பாவிகள் மீது மிகப் பெரிய அநீதி நடக்கின்றது. மேலும் வல்லரசுகள் அவர்களை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆகையால் இந்த மக்களில் நல்லவர்களும் இருக்கின்றார்கள். இதே போன்று சில மீடியாக்களில் வருகின்றது. சில நன்மையை விரும்பும் யூதர்களும் இவர்களுடைய உரிமை தொடர்பாக பேசுகின்றார்கள். மேலும் அநீதிக்கு எதிராகப் பேசுகின்றார்கள். ரஷ்யாவின் வெளியுறவுத் துறை அதிகாரி இவ்வாறு கூறியிருக்கின்றார்: இவ்வாறு இந்த நாடுகள் தங்களுடைய நிலையை மாற்றிக் கொள்ளவில்லை என்றால் இந்தப் போர் அந்த முழு பகுதியிலும் பரவி விடும்.

ஆனால், நான் புரிந்தது என்னவென்றால், அது உலகத்தில் பரவி விடும். ஆகையால் நிதானத்துடன் இருப்பது அவசியமாகும். முஸ்லிம் நாடுகளுக்கு நான் முன்பே கூறியிருந்தது போன்று ஒன்றாக இணைந்து ஒரு குரலில் பேச வேண்டும். உலகில் 53, 54 முஸ்லிம் நாடுகள் இருக்கின்றன எனக் கூறுகின்றார்கள் என்றால், பின்னர் ஒருமித்த குரலில் பேசுங்கள். அது மிகப் பெரிய சக்தியாகும். மேலும் அதற்கு தாக்கமும் இருக்கும். அவ்வாறில்லை என்றால் பின்னர் ஆங்காங்கே குரல்கள் எழுப்புவதனால் எந்தப் பயனும் இல்லை. உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு இந்த ஒரு வழிதான் உள்ளது. மேலும், இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். ஆகையால் முஸ்லிம் நாடுகள் உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக தங்களுடைய பங்களிப்பை முழுவதுமாக செலுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள்.

அல்லாஹ் இவர்களுக்கு இதற்கான நற்பேற்றை வழங்குவானாக. எவ்வாறிருப்பினும் நாம் துஆவின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டியது அவசியமாகும். அல்லாஹ் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவானாக. அப்பாவிகளான அநீதியிழைக்கப்பட்ட பாலஸ்தீனியர்களுக்குப் பாதுகாப்பை வழங்குவானாக. இதற்கு மேலும் அவர்கள் மீது அநீதி ஏற்படாமல் இருக்கட்டுமாக. மேலும் எங்கெல்லாம் அநீதி நடக்கின்றதோ அங்கெல்லாம் அநீதி உலகிலிருந்து முடிவுக்கு வரட்டுமாக. அல்லாஹ் நமக்கு துஆ செய்வதற்கான நற்பேற்றை வழங்குவானாக. ஆமீன். (ஜுமுஆ பேருரை 20.10.2023)

இன்றைய நாட்களில் உலகில் நிலவும் நிலைமைகளுக்காக துஆவிற்காக நான் மீண்டும் நினைவூட்டி விடுகின்றேன். ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கிடையிலான போர் மற்றும் அதன் விளைவாக அப்பாவி பாலஸ்தீனிய பெண்கள்

மற்றும் குழந்தைகளின் ஷஹாதத்துகள் (உயிர்த் தியாகங்கள்) அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. போர்ச் சூழல்கள் எவ்வளவு வேகமாக தீவிரமடைந்து கொண்டிருக்கின்றனவோ மேலும் இஸ்ரேலிய அரசாங்கமும் வல்லரசுகளும் எந்தக் கோட்பாட்டின் படி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவோ அவற்றை வைத்துப் பார்க்கும்போது உலகப் போர் தற்போது முன்னால் இருப்பதாகவே தென்படுகின்றது. தற்போது சில முஸ்லிம் நாடுகளின் தலைவர்களும் கூட வெளிப்படையாக இதனைக் கூறத் துவங்கி விட்டனர். தற்போது பேரின் இந்த வட்டம் விரிவடைந்து வருவதாகத் தென்படுகிறது என்று ரஷ்யாவும், சீனாவும், இதே போன்று மேற்கத்திய வல்லுநர்களும் கூட கூறவும், எழுதவும் தொடங்கி விட்டனர். அரசுகள் இதற்கென உடனடியாக ஒரு கோட்பாட்டை மேற்கொள்ளவில்லையெனில் பின்னர் உலகில் அழிவு ஏற்படும். அனைத்தும் செய்திகளில் வந்து கொண்டிருக்கின்றன. நிலைமை உங்கள் அனைவரின் முன்னிலையிலும் உள்ளது. எனவே அஹ்மதிகள் துஆக்களின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். Relax ஆகி விடக் கூடாது. குறைந்தபட்சம் ஒவ்வொரு தொழுகையிலும் ஒரு ஸஜ்தா அல்லது குறைந்தபட்சம் ஏதாவது ஒரு தொழுகையில் ஒரு ஸஜ்தாவைக் கண்டிப்பாக இதற்காக செய்ய வேண்டும். அதில் துஆ செய்ய வேண்டும்.

மேற்கத்திய நாடுகளில் எந்தவொரு நாட்டின் தலைவரும் இந்த விவகாரத்தில் நீதியுடன் செயல்பட விரும்பவில்லை. இது தொடர்பாக ஏதாவது கூறுவதற்கும் தைரியம் கொள்வதில்லை. எந்த நாடின் பிரதமர் அல்லது தலைவர் நல்லவர்? எந்த நாட்டின் தலைவர் நல்லவர் இல்லை? அவர் இவ்வாறு இருக்கக் கூடாது; முஸ்லிம்கள் அவருக்கு எதிராக பேசக் கூடாது போன்ற விவாதங்களில் அஹ்மதிகள் ஈடுபடாதீர்கள். இவை அனைத்தும் வீண் பேச்சுகள் ஆகும். ஒருவர் துணிச்சலுடன் போர் நிறுத்தத்திற்கான முயற்சிகள் செய்யாத வரை அவர் நிச்சயமாக உலகை அழிவின் பக்கம் அழைத்துக் கொண்டு செல்வதற்குப் பொறுப்பாளியாக இருக்கின்றார்.

எனவே உங்களது சுற்றுப்புறத்தில் துஆக்களுடன் அநீதியை நிறுத்துங்கள் என்ற விஷயத்தைப் பரப்புவதற்காக முயற்சி செய்யுங்கள். ஏதாவது ஓர் அஹ்மதிக்கு (உயர் மட்ட அளவில்) ஒருவருடன் தொடர்புகள் இருக்கின்றன என்றால் பின்னர் அவருக்குப் புரிய வையுங்கள். இதுவே வீரம் ஆகும். இதுவே அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்படுவதற்கான தரம் ஆகும்.

ஹமாஸ் எங்களது அப்பாவி மக்களைக் கொன்றுள்ளது. எனவே நாங்கள் பழிவாங்குவோம் என்று இஸ்ரேலிய அரசாங்கத்தின் பிரதிநிதி கூறுகின்றார். ஆனால், இந்த பழிவாங்குதல் தற்போது அனைத்து எல்லைகளையும் கடந்து சென்று விட்டது. இஸ்ரேலியர்களின் உயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக எத்தனை எண்ணிக்கை எடுத்துரைக்கப் –படுகின்றதோ அதை விட நான்கு ஐந்து மடங்கு அதிகமாக பாலஸ்தீனியர்களின் உயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவர்கள் கூறுவது போன்று ஹமாஸை அழிப்பது இவர்களது இலக்காக உள்ளதென்றால் பின்னர் அவர்களுடன் நேருக்கு நேர்



போர் புரியுங்கள். பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களை ஏன் குறி வைக்கின்றார்கள்? மேலும் தண்ணீர் உணவு மற்றும் மருத்துவம் போன்ற எல்லாவற்றிலிருந்தும் அந்த மக்களை ஏன் இழப்பிற்குரியவர்களாக ஆக்குகின்றார்கள்? மனித உரிமைகள் மற்றும் போர்களுக்குரிய விதிமுறைகள் தொடர்பான இந்த நாடுகளின் அனைத்து வாதங்களும் இங்கு வந்து முற்றுப் பெற்று விடுகின்றன. ஆம்! சிலர் இதன் பக்கம் கவனமூட்டவும் செய்கின்றனர். உதாரணமாக கடந்த நாட்களில் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா இவ்வாறு கூறியிருக்கின்றார்: போர் புரிய வேண்டும் என்றாலும், பின்னர் போர் விதிமுறைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். பொது மக்கள் மீது அநீதி இழைக்கப்படக் கூடாது.

ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் அவர்களும் பேசியிருந்தார்கள். அது குறித்து இஸ்ரேலிய அரசாங்கம் கூச்சலிட்டு விட்டது. ஆக, மாபெரும் நீதியை நிலைநாட்டக் கூடியவர்களாக தங்களைத் தாங்களே கருதக் கூடிய ஏனைய உலகின் அமைதிக்கான வாதம் புரியக் கூடியவர்கள் அல்லது தங்களை சாம்பியனாகக் கருதுகின்றவர்கள், வாதிடக் கூடியவர்கள் ஐ.நா பொதுச் செயலாளரின் கூற்றுக்கு ஆதரவாக எதுவும் வாய் பேசவில்லை. இன்னும் கூறப்போனால், அவர்கள் இதில் விருப்பமின்மையை வெளிப்படுத்தியுள்ளனர்.

எவ்வாறிருப்பினும், நிலைமைகள் அபாயகரமானவையாக உள்ளன. மேலும் மிகவும் அபாயகரமானவையாக ஆகிக் கொண்டே செல்கின்றன. மேற்கத்திய நாடுகளின் மீடியா ஒரு தரப்பு செய்திகளை மிகைப்படுத்தி வெளியிடுகின்றது. மேலும் மற்றொரு தரப்பை ஒரு மூலையில் குறுஞ்செய்தியாக வெளியிடுகின்றது. உதாரணமாக, கடந்த நாட்களில் பிணையக் கைதியாக இருந்து விடுதலையான பெண்களில் ஒருவர் இவ்வாறு கூறினார்: நான் கைது செய்யப்பட்டிருந்த போது என்னுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளப்பட்டது. இந்தச் செய்தியோ ஒரு மூலைக்கு சென்று விட்டது. ஹமாஸ் பிடியில் இருந்தது நரகமாக இருந்தது என்ற கூற்று தலைப்புச் செய்திகளாக ஆக்கப்பட்டு முன் வைக்கப்படுகின்றது.

அனைத்து நிலவரங்களையும் முன்னால் வைத்து விட்டு பின்னர் யார் அநீதியாளர்? யார் அநீதியிழைக்கப்பட்டவர்? எந்த அளவிற்கு இந்தப் போர் ஆகுமானதாகும்? இந்தப் போர் எங்கே சென்று முடிய வேண்டும் என்பதையெல்லாம் உலகம் தீர்மானித்துக் கொள்வதற்கு விட்டு விடுவதுதான் நீதி ஆகும்.

உலகிற்கு முன்னால் அனைத்து நிலைமைகளும் வந்து விட வேண்டுமே தவிர ஒரு சார்பு கருத்து கூடாது. எவ்வாறிருப்பினும் துஆக்களின் பக்கம் மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். அநீதியை முடிவுக்குக் கொண்டு வர உங்களது வட்டத்தில் நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். மேலும் துஆவும் செய்ய வேண்டும்.

அநீதியிழைக்கப்பட்ட முஸ்லிம்களுக்காகவும், முஸ்லிம் அரசாங்கங்கள் ஒரு விரிவான மற்றும் நீண்ட கால திட்டத்தை வகுப்பதற்காகவும் துஆ செய்ய வேண்டும். முஸ்லிம்களின் கஷ்டங்கள் நீங்குவதற்காகவும் நாம் குறிப்பாக வேதனை கொள்ள வேண்டும். நாம் எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம் என்றால், (முஸ்லிம்களாகிய) அவர்களின் புறமிருந்து நமக்கு வேதனைகள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற போதிலும் அன்னார் (அலை) முஸ்லிம்களுக்காக தமது இந்த உணர்வுகளை (ஒரு பாரசீக கவிதையில் இவ்வாறு) வெளிப்படுத்தியுள்ளார்கள்:

*ஏ தில் து நீஸ் காதிரே இய்னான் நிகாஃ தார்காகர் குனின்த் தஃவயே ஹுப்பே பைகம்பரம்.*

பொருள்: உள்ளமே! நீ இந்த மக்களைக் கருத்தில் கொள்! (ஏனெனில்) இறுதியில் அவர்கள் எனது தூதர் (ஸல்) அவர்களை நேசிப்பதாக வாதம் செய்கின்றனர். (இஸாலா அவ்ஹாம், பாகம் 1, ரூஹானி கஸாயீன் தொகுதி 3 பக்கம் 182)

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தின் தேட்டம் என்னவென்றால், நாம் முஸ்லிம்களுக்காக அதிகமாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேற்றை வழங்குவானாக. மேலும் முஸ்லிம்களுக்கும் உலகத்திற்கும் அறிவை வழங்குவானாக. (ஜுமுஆ பேருரை 27.10.2023)

பாலஸ்தீன மக்களை எப்போதும் துஆக்களில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அவர்களை மறவாதீர்கள். பெண்களும், குழந்தைகளும் அநீதியின் உரலில் அரைக்கப்படுகின்றனர். அல்லாஹ் விரைவில் அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டைச் செய்வானாக. (ஜுமுஆ பேருரை 03.11.2023)

பாலஸ்தீனத்தைச் சேர்ந்த அநீதிக்குள்ளானவர்களுக்காக துஆ செய்யும்படி நான் மீண்டும் கூறுகிறேன். இப்பொழுது குறைந்தபட்சம் சில முஸ்லிம் அல்லாதவர்களும், சில அரசியல்வாதிகளும் பயந்து பயந்தாவது இந்த அநியாயத்திற்கு எதிராக ஏதாவது பேச ஆரம்பித்து விட்டார்கள். இன்னும் சொல்வதென்றால் இப்பொழுதோ சில யூதர்களும் இந்த செயலில் விருப்பமின்மையை வெளிப்படுத்தியுள்ளார்கள். எங்களுக்கு அவப்பெயரை ஏன் ஏற்படுத்துகின்றீர்கள் என்று இஸ்ரேல் அரசாங்கத்திடம் அவர்கள் கேட்கிறார்கள்.

எவ்வாறிருப்பினும், அந்நியர்களிடமிருந்தும் எங்கிருந்–தாவது சிறு சிறு குரல்கள் எழத் தொடங்கி விட்டன. பாலஸ்தீனியர்களுக்கு உதவி சென்றடையும் பொருட்டு தினமும் நான்கு மணி நேரம் போரை நிறுத்த வேண்டும் என்றும் இவர்கள் கூறுகிறார்கள். இதற்கு Pause என்று பெயர் வைத்துள்ளார்கள். இது எந்த எளவுக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும், மீதமுள்ள 20 மணி நேரத்தில் இவர்கள் பாலஸ்தீனியர்கள் மீது எவ்வளவு அநியாயம் செய்யப் போகிறார்கள் என்பதையும் அல்லாஹ்வே நன்கறிவான். எவ்வளவு குண்டுகள் வீசுவார்கள் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். பெரும்பாலும் பெரிய அரசாங்கங்களும் அரசியல்வாதிகளும் கூட பாலஸ்தீனியர்களின் உயிருக்கு எந்த முக்கியத்துவமும் அளிப்பதில்லை. இவர்களுடைய சுய இலாபங்கள் உள்ளன. எவ்வாறிருப்பினும், அல்லாஹ்வும் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை அவகாசம் வழங்குவான்; இந்த உலகம் மட்டுமல்ல; மறுமையும் உள்ளது என்பதை இந்த மக்கள் நினைவில் கொள்ள வேண்டும். இந்த உலகத்தில் நாம் பலனடைந்து விட்டோம் என்றால், எல்லாம் கிடைத்து விடும் என்று இவர்கள் கருதுகிறார்கள். இந்த உலகத்திலும் பிடிக்கப்படலாம்; மறுமையிலும் பிடிக்கப்படுவர்.



எவ்வாறிருப்பினும், நாம் துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் அநீதிக்குள்ளான பாலஸ்தீனியர்கள் மீது கருணை புரிந்து அவர்களை இந்த அநீதியிலிருந்து விடுவிப்பானாக. (ஜுமுஆ பேருரை 10.11.2023)

நான் ஏற்கனவே பல குத்பாக்களில் பாலஸ்தீன மக்களுக்காக துஆவிற்குக் கூறி வருகின்றேன். இன்றும் அது தொடர்பாக கூற விரும்புகின்றேன். தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். தற்போது அநீதி எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கின்றது. ஹமாஸுடன் போர் என்ற பெயரில் அப்பாவி குழந்தைகளும், பெண்களும், நோயாளிகளும் கொல்லப்பட்டு வருகின்றனர். இந்த பெயர் தாங்கி நாகரிகம் வாய்ந்த உலகமோ எல்லா வகையான போர் சட்டங்களையும், நிபந்தனைகளையும் முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டது. அல்லாஹ் முஸ்லிம் நாடுகளுக்கு புரிதலை வழங்குவானாக.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 73, 74 ஆண்டுகளுக்கு முன்பே முஸ்லிம்கள், நாடுகள் ஒன்று சேர வேண்டும் என்று எச்சரித்தார்கள். மேலும் அவர்கள் ஒன்று சேரவில்லையென்றால் பின்னர் ஒவ்வொருவராக மடிய விரும்புகின்றார்களா? அல்லது ஒன்றுபட்டு தங்களது ஒற்றுமையை விரும்புகின்றார்களா என அவர்களே முடிவு எடுத்துக் கொள்ளட்டும் என்று கூறியுள்ளார்கள்.

அந்தோ! தற்போது கூட இந்த மக்கள் இதனைப் புரிந்து ஒன்று சேர்ந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

நிலைமை எப்படி இருக்கின்றது என்றால், என்னிடம் ஒருவர் கூறினார்: உம்ரா செய்பவர்களிடம் நீங்கள் அங்கு போய் பாலஸ்தீனம், இஸ்ரேல் போர் தொடர்பாக எதுவும் பேசக் கூடாது என்று கூறப்படுகின்றது. அங்குள்ள அரசாங்கம் விசா வழங்கும்போது இவ்வாறு வழிகாட்டுகின்றது.

இந்தத் தகவல் சரியென்றால் பின்னர் இது முஸ்லிம் அரசாங்கங்களின் பெரும் கோழைத்தனத்தின் வெளிப்பாடு ஆகும்.

எவ்வாறிருப்பினும், உம்ராவில் இறைவணக்கத்திற் –குரிய உரிமையையும் நிறைவேற்ற வேண்டும். அதனிடையே எந்நிலையிலும் வேறெந்த விஷயமும் இருக்காது. ஆனால் அதே நேரம் அநீதிக்குள்ளான பாலஸ்தீனியர்களுக்காக கண்டிப்பாக துஆ செய்ய வேண்டும். அவர்களையும் துஆவில் நினைவு கூர்ந்தால் நன்றாக இருக்கும். முஸ்லிம் அரசாங்கங்களும் குரல் கொடுக்கின்றன. ஆனால் இன்றைய நாட்களில் அவை மிகவும் பலவீனமான குரல்களாக இருக்கின்றன. சில குரல்கள் எழுந்தன. ஆனால் முஸ்லிம் அல்லாத நபர்கள் மற்றும் அரசியல்வாதிகள், அரசாங்கங்கள் இதை விட வலுவான குரல்களை எழுப்பியுள்ளனர். அல்லாஹ் முஸ்லிம்களுக்கும் துணிவையும், நுட்பமான ஞானத்தையும் வழங்குவானாக.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கூட நன்றாகப் பேசுகின்றார். இன்றைய நாட்களில் சிறப்பாகப் பேசுகின்றார். ஆனால் அவரது பேச்சுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை என்றே தோன்றுகின்றது. இந்தப் போருக்குப் பிறகு அல்லது இது மேலும் பரவி விட்டால் அல்லது உலகப் போர் போன்ற ஒரு சூழலை உருவாக்கி விட்டால் அதன் பிறகு ஐக்கிய நாடுகள் சபையின் நிலையும் முடிவுக்கு வந்து விடும் என்றும் தோன்றுகின்றது.

அல்லாஹ் உலகிற்கு அறிவை வழங்குவானாக. தற்போது உலகம் தனது அழிவை மிகவும் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்று தோன்றுகிறது. இந்த அழிவிற்குப் பிறகு எந்த மக்கள் பாதுகாப்பாக இருப்பார்களோ அவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக. அவர்கள் இறைவனின் பக்கம் கவனம் செலுத்துபவர்களாக அவன் பக்கம் திரும்புவார்களாக.

எவ்வாறிருப்பினும், நாம் இது தொடர்பாக அதிகமாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் உலகின் மீது கருணை புரிவானாக. (ஜுமுஆ பேருரை 17.11.2023)

பாலஸ்தீனியர்களுக்காகவும் துஆக்கள் செய்து வாருங்கள். அவர்கள் மீது செய்யப்படுகின்ற அநீதிகளிலிருந்து அவர்களுக்கு அல்லாஹ் இரட்சிப்பை வழங்குவானாக. வாழ்வாதாரத்திற்குத் தேவையான பொருட்கள் அவர்களைச் சென்றடைவதற்காக சில நாட்களுக்குப் போர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதன் பிறகு என்ன நிகழும்? உதவி கிடைத்த பிறகு மீண்டும் அவர்களைக் கொல்வார்கள். இஸ்ரேலிய அரசாங்கத்தின் நோக்கம் அபாயகரமானதாகத் தெரிகின்றது. ஏனெனில், அந்த அரசாங்கத்தின் சிறப்பு ஆலோசகர் ஒருவர் நேற்றோ அல்லது முந்தைய நாளோ அறிவிக்கும் போது இந்தப் போர் நிறுத்தத்திற்குப் பிறகு உடனடியாக போரை ஆரம்பிக்கவில்லை என்றால் நான் இந்த அரசை விட்டு வெளியேறி விடுவேன் என்று கூறியிருக்கின்றார். அவர்களின் சிந்தனைகள் இவ்வாறானவை –யாக இருக்கின்றன. வல்லரசுகள் அனுதாபங்களைப் பற்றி வெளிப்படையில் பேசுகின்றனதான். ஆனால் அவர்கள் நீதியை நிலைநாட்ட விரும்பவில்லை. இந்த விவகாரத்தில் நிதானத்தைக் கடைபிடிக்க விரும்பவில்லை. இந்தப் போர் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் மட்டுமே இருக்கும் என்று அவர்கள் கருதுகின்றனர். ஆனால் அவர்களுக்கு இது குறித்த அறிவு இல்லை. எவர்கள் இது குறித்து அறிவு பெற்றிருக்கின்றனரோ அவர்கள் பேச ஆரம்பித்து விட்டனர். இந்தப் போர் அந்தப் பகுதிகளுக்கு மட்டுமே உட்பட்ட போராக இருக்காது. மாறாக, வெளியேயும் பரவும். மேலும் அவர்களுடைய நாடுகள் வரை வந்தடைந்து விடும் என்று அவர்கள் பேசுகின்றனர். முஸ்லிம் அரசாங்கங்கள் சிறிது பேச ஆரம்பித்து விட்டன. உதாரணமாக, சவூதி அரசரும் பேசும்போது முஸ்லிம்களின் குரல்கள் ஒரே குரலாக இருக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். ஒரே குரலாக ஆக வேண்டும் என்றால் அதற்கான உறுதியான முயற்சியும் செய்ய வேண்டும். அவர்களுக்கு இது குறித்த உணர்வு பிறந்து விட்டதென்றால் பின்னர் அதனை செயல்படுத்துவதற் –குரிய நற்பேற்றையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக. எவ்வாறிருப்பினும், துஆக்களின் பக்கம் அதிக கவனம் செலுத்துங்கள். (ஜுமுஆ பேருரை 24.11.2023)

பாலஸ்தீனியர்களுக்காக துஆக்கள் செய்து கொண்டே இருங்கள். போர் நிறுத்தம் முடிந்த பிறகு, மீண்டும் இவர்கள் மீது பாகுபாடின்றி குண்டுகள் வீசப்படும். மீண்டும் அப்பாவிகள் ஷஹீதாவார்கள். எவ்வளவு அநீதியிழைக்கப்படும் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். இவர்களின் எதிர்காலம் குறித்து வல்லரசுகளின் எண்ணங்கள் மிக பயங்கரமானவையாக உள்ளன. எனவே இவர்களுக்காக அதிகம் துஆக்கள் செய்ய வேண்டிய தேவையுள்ளது. எல்லாம் வல்ல அல்லாஹ் கருணை புரிவானாக. (ஜுமுஆ பேருரை 01.12.2023)

பாலஸ்தீனியர்களுக்காக துஆக்களின் பக்கம் நான் எடுத்துக் கூறி வருகின்றேன். அவர்களுக்காக துஆக்கள் செய்து வாருங்கள். கடந்த நாட்களில் போர் நிறுத்தம் செய்யப்பட்ட பிறகு, என்ன நடக்கும் என்று கருதப்பட்டதோ அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. இஸ்ரேலிய அரசாங்கம் முன்பை விடவும் அதிகமாக காஸாவின் ஒவ்வொரு பகுதியிலும் குண்டுகளை வீசி வருகிறது; தாக்குதல் நடத்தி வருகிறது. அப்பாவி குழந்தைகளும், குடிமக்களும் ஷஹீதாகிக் கொண்டிருக்கின்றனர். தற்போது இந்த செயலுக்கு எதிராக அமெரிக்காவின் ஒரு காங்கிரஸ் பிரதிநிதி அநேகமாக அவர் யூதர் என்று நினைக்கின்றேன். அவர் பேசும்போது இப்பொழுது இது மிக அதிகமாகி விட்டது; இதை தடுப்பதற்காக அமெரிக்கா தனது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். மத்தியக் கிழக்குப் பகுதியில் ஒரேடியாக நடத்தப்படும் இந்த ஃபயரிங் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும், குண்டு வீச்சுகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் மெல்லிய குரலில் அமெரிக்க அதிபரும் தற்போது இவ்வாறு பேசியிருக்கின்றார். தெற்குப் பகுதிக்குச் செல்லுங்கள்; அங்கு

ஒன்றும் ஆகாது என்று முன்பு கூறி வந்தனர். தற்போது அங்கேயும் இதே நிலை தான் காணப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும், அமெரிக்க அதிபரின் இந்தக் கூற்று, ஏதோ மனிதாபிமானத்தின் அடிப்படையில் கூறப்பட்டது என்று எவ்வித தப்பெண்ணத்திலும் நாம் இருந்து விடக் கூடாது. மாறாக இது அவர்களின் சுயநலனிற்காக கூறப்பட்டதாகும். அமெரிக்காவில் தேர்தல் நடைபெற இருக்கின்றது. போர் நிறுத்தப்பட வேண்டும் என்று அங்குள்ள இளைஞர்களும் எதிர்நடவடிக்கைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். அதே போன்று அமெரிக்காவில் வசிக்கும் முஸ்லிம்களும் குரல் எழுப்பி இருக்கின்றனர். எனவே இவர்கள் வாக்கு சேகரிப்பதற்காக இவை அனைத்தையும் செய்கின்றனர். பாலஸ்தீனியர்கள் மீதோ முஸ்லிம்கள் மீதோ அவர்களுக்கு எந்த அனுதாபமும் கிடையாது.



அடுத்து, முஸ்லிம் நாடுகளைப் பார்க்கும்போது அவர்களின் குரலில் ஓரளவு அழுத்தம் உருவாகி வருகின்றது. ஆனால் எதுவரை ஒன்றுபட்டு போர் நிறுத்தத்திற்காக அவர்கள் முயற்சி செய்ய மாட்டார்களோ அதுவரை எந்தப் பயனும் ஏற்படாது. அல்லாஹ் முஸ்லிம்களிடத்தில் ஒற்றுமையை உருவாக்குவானாக. முஸ்லிம்களிடத்தில் ஒற்றுமை இல்லை என்பதும், ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமைக் கொல்லத் துடித்துக் கொண்டிருக்கிறார் என்பதும் முஸ்லிம் அல்லாதவர்களுக்குத் தெரியும். ஏமனில் என்னவெல்லாம் நடக்கின்றது என்பதைப் பாருங்கள். அதே போன்று மற்ற நாடுகளையும் பாருங்கள். ஆயிரக்கணக்கான குழந்தைகளும் அப்பாவிகளும் முஸ்லிம்களின் கைகளாலேயே மடிந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் கூறுவதாயின் சில இடங்களில் இலட்சக்கணக்கில் இறந்து கொண்டிருக்கின்றனர். இந்த விஷயம் தான் அந்நியர்களுக்குத் துணிவை வழங்கி உள்ளது. முஸ்லிம்களின் மீது கொடுமை இழைத்தால் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஏனெனில், இவர்கள் தங்கள் மீதே அநீதியிழைத்து வருகின்றனர் என்பது அவர்களுக்குத் தெரிகின்றது. முஸ்லிம்களுக்கு மற்ற முஸ்லிம்களின் உயிரைப் பற்றி எவ்வித அக்கறையும் இல்லையென்றால் எதிரிகளுக்கு எவ்வாறு அக்கறை இருக்கும். முஸ்லிம்கள் பிற முஸ்லிம்களைக் கொலை செய்வதைக் குறித்து அல்லாஹ் மிகக் கடுமையாக எச்சரித்துள்ளான். அவர்கள் நரகவாசிகளாக ஆகிவிடுவார்கள் என்று அவன் எச்சரிக்கையும் செய்துள்ளான். முஸ்லிம்கள் ஒன்றாக ஆகி உலகிலிருந்து அநீதியை அகற்றக் கூடியவர்களாக ஆகட்டுமாக. அநீதியை உருவாக்கி சண்டையிடக் கூடியவர்களாக ஆகாமல் இருக்கட்டுமாக. ஐ.நா சபையும் தனது குரலை உயர்த்துவதற்கு முயற்சி செய்துள்ளது. ஆனால், அதன் குரலை யார் கேட்கின்றார்கள்? நாங்கள் இதை செய்வோம்; அதை செய்வோம் என்று கூறுகின்றார். ஆனால் ஒன்றும் செய்ய இயலாது. அவர்களுடைய பேச்சைக் கேட்பதற்குக் கூட ஆள் இல்லை. வல்லரசுகள் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன. அல்லாஹ் முஸ்லிம்களின் மீது கருணை புரிவானாக.

எவ்வாறிருப்பினும், இந்த அநீதியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நாம் துஆக்கள் செய்வதுடன் நட்பு வட்டத்திலுள்ள மக்களுக்கும், தத்தமது பகுதியுள்ள அரசியல்வாதிகளுக்கும் இந்த அநீதியை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக குரல் எழுப்புவதற்கு நாம் தொடர்ச்சியாக கவனமூட்டி வர வேண்டும். இதனைக் குறித்து முன்னரும் நான் ஜமாஅத்துகளின் மூலமாக தூதுச் செய்தி அனுப்பி –யுள்ளேன். இந்த அநீதியை முடிவுக்குக் கொண்டு வர நாம் முயற்சி செய்ய வேண்டும் என்று நாம் நமது நட்பு வட்டாரத்திலும் இந்த விஷயத்தைப் பரப்ப வேண்டும். அப்பாவிகளை அல்லாஹ் கொடுமைகளிலிருந்து காப்பாற்றுவானாக. (ஜுமுஆ பேருரை 08.12.2023)

நான் பாலஸ்தீனத்து மக்களுக்காக துஆக்கள் செய்யவும் கூறிக் கொண்டே இருக்கிறேன். துஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் உலகத்திற்கு அநீதிக்கு எதிராக உண்மையான செயலை வெளிப்படுத்து –வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக.

குரல்களோ சற்று உயரத் துவங்கியுள்ளனதான். அநீதி இழைக்கப்படுகிறது; அநீதியிழைக்கப்படுகிறது என்று பேசவும் செய்கிறார்கள்தான். ஆனால், எல்லாரும் இஸ்ரேல் அரசாங்கத்தைப் பார்த்து அஞ்சுவதாகத் தெரிகிறது அல்லது இயல்பாகவே இந்த மேற்கத்திய உலகம் முஸ்லிம்களுக்கு எதிராக இருக்கும் வெறுப்பின் காரணமாக இவர்கள் முஸ்லிம்கள் மீது ஒன்று அநீதி முடிவடையக் கூடாது என்றோ அல்லது எப்படி முயற்சி செய்யப்பட வேண்டுமோ அப்படி செய்ய வேண்டாம் என்றோ அவர்கள் விரும்புகிறார்கள். அப்பாவிக் குழந்தைகள் ஆயிற்றே! பாவப்பட்ட பெண்கள் ஆயிற்றே! அவர்கள் மீது அநீதியிழைக்கப்படுகிறதே! முதியவர்கள் இருக்கிறார்களே என்று அவர்கள் பார்ப்பதில்லை.

எவ்வாறிருப்பினும், இவர்கள் மீதோ நாம் அதிக நம்பிக்கை வைக்க முடியாது. ஆனால் எந்நிலையிலும் நாம் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். அவர்களுக்குப் புரிய வைத்துக் கொண்டே இருக்கவும் வேண்டும். துஆவும் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் முஸ்லிம் நாடுகளுக்கு தங்களுடைய குரல்களில் வலுவை ஏற்படுத்துவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. உண்மையில் ஒன்றாகி இந்த அநீதிக்கு எதிராக குரல் எழுப்புவார்களாக. இதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்வார்களாக. (ஜுமுஆ பேருரை 22.11.2023)

(தொகுப்பு: A. அப்துல் நிஸார்)



# காணாமற்போன மெர்ஸிடஸ் காரும் இறை இருப்பிற்கான சான்றும்

முஹம்மது ஸபாஹுத்தீன் ரஃபியுத்தீன் - யு.கே.

மே 2020-ல், பட்டப்பகலில் எனது கார் எனது டிரைவ்வேயில் இருந்து திருடப்பட்டது. திருடர்கள் நன்கு பயிற்சி பெற்ற குற்றவாளிகள் ஆவர். அவர்கள் தங்கள் அடையாளத்தின் ஒரு தடயத்தையும் விட்டுச் செல்லவில்லை. குறிப்பாக காரில் கண்காணிப்பு அமைப்பு (Tracking System) இல்லாததால், காரைக் கண்டுபிடிப்பது சாத்தியமற்றது என்று போலீசார் தெரிவித்தனர். அவர்களின் சரியான வார்த்தைகள், 'முஹம்மது நீங்கள் இப்போது செய்யக் கூடிய சிறந்த விஷயம், காரை மறந்து விடுவதுதான்.'

அன்றிரவு, கனவில், என் கார் கண்டுபிடிக்கப்படுவது மட்டுமல்லாமல், என்னிடம் திரும்பவும் தரப்படும் என்று கண்டேன். நான் கண்விழித்தபோது, அவசரமாக இந்தக் கனவை எனது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொண்டேன், 'அல்லாஹ் என்னிடம் கார் கிடைத்து விடும்; திருப்பித் தரப்படும் என்று எனக்குச் கூறியிருக்கிறான்' என்று கூறினேன். கார் கண்டுபிடிக்கப்படும் என்பதில் எனது முழுமையான உறுதியைக் கண்டு எனது குடும்பத்தினர் வியப்படைந்தனர். அவர்களின் வியப்பிற்கு குறிப்பான காரணம் காரில் கண்காணிப்பு அமைப்பு இல்லாததாகும். 'அல்லாஹ் என்னிடம் கூறினான்; எனவே அது நடக்கும்' என்று நான் உறுதியாக அவர்களிடம் கூறினேன்.

அடுத்த நான்கு மாதங்களுக்கு, காரைப் பற்றிய தகவலைப் பெற, சில வாரங்களுக்கு ஒருமுறை போலீஸை அழைத்தேன். போலீஸ் கான்ஸ்டபிள் பொறுப்பாளர் தனது முந்தைய வார்த்தைகளை மட்டும் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தார். 'காரை மட்டும் மறந்து விடு' நான் எனக்குள் கூறிக் கொள்வேன்: 'அது கண்டுபிடிக்கப்பட்டு என்னிடம் திருப்பித் தரப்படும் என்று அல்லாஹ் எனக்குக் காட்டியதை நான் எப்படி மறக்க முடியும்?' என் உறுதியான நம்பிக்கை கான்ஸ்டபிளின் வார்த்தைகளால் சிறிதும் தளரவில்லை.

பின்னர், ஒரு செவ்வாய் கிழமை மதியம் - கார் திருடப்பட்ட நான்கு மாதங்களுக்குப் பிறகு - எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. 'நான் கூறுவதை நீங்கள் நம்ப மாட்டீர்கள்.' அது அதே போலீஸ் கான்ஸ்டபிளின் குரல். நான் சிரித்துக் கொண்டே 'அல்ஹம்துலில்லாஹ்' (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்றேன். போலீஸ் கான்ஸ்டபிளுக்குத் தெரியாதது என்னவென்றால், நான்கு மாதங்களுக்கு முன்பிருந்தே எனது கனவில், இதே உரையாடல் நடக்கும் என்றும், இதே நிலைமை ஏற்படும் என்றும் எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்குக் காட்டினான். போலீஸ் கான்ஸ்டபிள் தொடர்ந்தார், 'உங்கள் கார் மொண்டெனேகுரோவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது மொண்டெனேகுரோவில் குற்றச் செயல்களில் ஈடுபட்டது; மொண்டெனேகுரோவில் உள்ள உள்ளூர் காவல்துறை எங்களைத் தொடர்பு கொண்டது. காரை உங்களிடம் ஒப்படைப்பதற்காக மீண்டும் வாட்ஃபோர்டிற்கு கொண்டு வர நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்.'

என் கண்களில் கண்ணீர் நிறைந்தது. காரின் காரணமாக அல்ல. எல்லாத் தடைகளையும் மீறி, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வாக்குறுதி எவ்வாறு நிறைவேறியது! கார் மீட்டெடுக்கப்பட்டது இங்கிலாந்தில் இருந்து அல்ல. ஆனால் என் வீட்டிலிருந்து 2380 கி..மீ தொலைவில் உள்ள மாண்டினீக்ரோ நாட்டில் உள்ள ஒரு தொலை தூரக் கிராமத்திலிருந்து ஆகும். அது இங்கிலாந்தின் ஹெர்ட்ஃபோர்ட்ஷையரில் உள்ள வார்ட்ஃபோர்டில் உள்ள என்னிடம் திரும்ப கொண்டு வரப்பட்டது. இதை விட சாத்தியமற்றதாக என்ன இருக்க முடியும்? ஆனால் அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. நிச்சயமாக அல்லாஹ் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றல் பெற்றவன் ஆவான்.

இந்தச் சம்பவம், இதர எண்ணற்ற சம்பவங்களுடன் சேர்ந்து, உயிருள்ள இறைவன் இருப்பதை எனக்குக் காட்டியது மற்றும் அல்லாஹ்வின் மீதான எனது நம்பிக்கையை முழுமையான நிச்சய உறுதியாக மாற்றியது. இதனையே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஹக்குல் யகீன் (அனுபவ ஞானம்) என்று விவரிக்கின்றார்கள். இந்த சம்பவங்கள் உயிருள்ள இறைவன் இருக்கின்றான் என்ற எனது நம்பிக்கையை உறுதிப்படுத்தி உள்ளது. அந்த இறைவன் தன்னை அழைப்பவர்களின் பிரார்த்தனைகளைக் கேட்பது மட்டுமல்லாமல் பதில் அளிக்கவும் செய்கின்றான். இது எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுவது போல் 'என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றி கேட்டால், "நான் அவர்களுக்கு அருகில் இருக்கின்றேன். பிரார்த்தனை செய்கின்றவர் என்னை அழைக்கின்றபோது நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே அவர்களும் என் கட்டளையை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள்.'' (திருக்குர்ஆன் 2:187)

ஒரு கார் திருடப்பட்ட பிறகு, கண்காணிப்பு அமைப்பு அதில் இல்லாத நிலையில் காவல்துறை வல்லுனர் அதைக் கண்டுபிடிப்பது சாத்தியமற்றது என்று எனக்கு உறுதியளித்த பிறகு ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து நான்கு மாதங்கள் கழித்து எப்படி மீட்டெடுக்க முடியும்? இதுவே அல்லாஹ்வின் ஆற்றலாகும். அவனால் முடியாதது எதுவுமில்லை. அவனே என்றும் உயிருடனிருக்கின்ற இஸ்லாத்தின் இறைவன் ஆவான்.

(ரிவியூ ஆஃப் ரிலிஜியன்ஸ் - மார்ச் 2024)

**தமிழில்: அபூ அப்துல்லாஹ்**

# உலகளாவிய அழிவு குறித்து ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் எச்சரிக்கை, வேதனை மிகுந்த துஆக்கள் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பொறுப்புகள்

மவ்லவி K. தாரிக் அஹ்மது சாஹிப் (அடிஷ்னல் நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாது நூருல் இஸ்லாம், காதியான்)

தமிழாக்கம்: இப்னு வஸீம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி ...)*

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மேற்கொண்டு கூறுகிறார்கள்:

தனக்காக விரும்புவதையே மற்றவர்களுக்காகவும் விரும்புங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ள பொன்னான கோட்பாட்டை எப்பொழுதும் நாம் முன்வைக்க வேண்டியது வரும்.

எனவே, இந்தக் கோட்பாட்டை முன்னால் வைத்தவாறு, நான் எனக்காக அல்லது எனது சமுதாயத்திற்காக அல்லது எனது நாட்டிற்காக மட்டும் அமைதிக்கான ஆசை கொண்ட -வனாக இருக்கிறேன் என்றால், அந்நிலையில் அல்லாஹ்வின் உதவி, அவனது ஆதரவு மற்றும் அவனுடைய திருப்தி எனக்கு ஒருபோதும் கிடைக்க முடியாது என்ற சிந்தனையை நாம் எப்பொழுதும் மேற்கொள்ள வேண்டியது வரும்.

அல்லாஹ்வுக்காக எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற கொள்கையில் மனிதன் நிலை நிற்கும்போதுதான் உண்மையான அமைதி நிலைபெற முடியும். இல்லை என்றால், நிலைபெற முடியாது.

அந்தப் பேருதவி புரிபவர் மீது நீ அனுதினமும்
நூறு நூறு முறை தரூத் ஓதுவாயாக
தூய முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்கள்
நபிமார்களுக்கெல்லாம் தலைவர் ஆவார்கள்.

அல்லாஹ்வின் மறையான திருக்குர்ஆனின் அழகிய போதனைகள் படி அமல் செய்வதும், செய்ய வைப்பதும் அந்த நிரந்தரமான மறையின் பிரச்சாரத்தை உலகில் பரப்புவதும் அமைதியை நிலைநாட்டு -வதற்காக நமது முதன்மையான பொறுப்பாக இருக்க வேண்டும்.

இது தொடர்பாக சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:

“எனவே, உங்களது இம்மையையும், மறுமையையும் சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்றால், அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ வேண்டும் என்றால், நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய அல்லாஹ்வின் இந்தக் கூற்றை எப்பொழுதும் நம் முன் வைக்க வேண்டும்:

يَّهۡدِىۡ بِهِ اللّٰهُ مَنِ اتَّبَعَ رِضۡوَانَهٗ سُبُلَ السَّلٰمِ பொருள்: அவனது விருப்பத்தைத் தேடுகின்றவர்களை அல்லாஹ் இதன் மூலம் சமாதான வழிகளில் நடத்துகிறான். (திருக்குர்ஆன் 5:17)

இந்த ஒளிமிக்க மறைநூலின் நேர்வழியை எப்பொழுதும் உங்கள் முன் வையுங்கள். இந்த ஒளிமிக்க மறைநூலின் நேர்வழியைப் படிக்கவும், கண்முன் வைக்கவும் வேண்டும். அப்போதுதான் ஸுபுலஸ் ஸலாம் -ல், அதாவது, அமைதியின் வழிகளில் செல்லக் கூடியவர்களாக இருப்பீர்கள்.



இந்த மறைநூலின் எந்த ஒரு கட்டளையும் மனித அமைதியை சீர்குலைக்கக் கூடியதல்ல. எனவே, இந்தத் தூதுச் செய்தியை நம்மவர்களுக்கும், அந்நியர்களுக்கும் வழங்குவது இன்று நமது பணியாகும். இதுவே உலக அமைதிக்கு உத்தரவாதம் ஆகும்.” (ஆகஸ்ட் 21, 2022 அன்று ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவிலிருந்து)

அமைதி நிறைந்த காலமானாலும் சரி, ஆபத்துகள் நிறைந்த காலாமானும் சரி, ஒருவர் மற்றவர் மீது அனுதாபம் காட்டுவது எப்பொழுதும் ஜமாஅத் மக்களின் வழக்கமாக இருந்து வந்துள்ளது. மேலும், துன்பம் மற்றும் துயரங்களின் சந்தர்ப்பத்தில் ஒருவர் மற்றவருக்கு உதவி புரிவது மிகவும்

அவசியமாகும். குறிப்பாக, மனிதன் தானே துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் போது, அச்சமயத்தில் மற்றவர்களுடன் அனுதாபமாக நடந்து கொள்வது ஒரு மிகப் பெரிய சவாலாகும்.

நம்மிடம் உண்பதற்கு ஒரே ஒரு ரொட்டிதான் உள்ளது என்றால், அதிலிருந்தும் பசித்திருக்கும் ஒருவருக்குப் பங்கு கொடுக்கும் இந்த செயலே உண்மையான அனுதாபம் ஆகும். இதைத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கிறார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: கருணையுள்ள தாய் தன்னுடைய குழந்தைகள் மீது அனுதாபம் காட்டுவது போன்று நான் மனித குலத்தின் மீது அனுதாபம் காட்டுகிறேன். இப்படிப்பட்ட நிபந்தனையற்ற அனுதாபம் கொள்ளும் சிறப்பு நமக்கு இருக்க வேண்டும்.

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இது தொடர்பாக நமக்கு இவ்வாறு அறிவுரை வழங்குகிறார்கள்:



மக்களிடம் உண்மையான சகோதரத்துவம் உருவாகாத வரை அமைதி நிலைபெறவே முடியாது. மேலும், ஓரிறைவனை ஏற்காமல் உண்மையான சகோதரத்துவம் உருவாக முடியாது. ஏகனும் தனித்தவனுமான இறைவனோடு தொடர்பு கொள்ளாமல் உருவாகவே முடியாது. ஏற்றுக் கொள்வது மட்டுமல்லாமல், அவனோடு ஒரு தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது வரும். மேலும், அவனுடைய போதனைகளும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலமாகவே நமக்குக் கிடைத்திருக்கின்றன. (ஆகஸ்டு 21, 2022 அன்று ஜெர்மனி ஆண்டுமாநாட்டில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவிலிருந்து)

உலகின் தற்போதைய நிலைமையில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் எப்பொழுதும் நமக்கு துஆக்கள் செய்யுமாறு வலியுறுத்துகிறார்கள். மேலும், இந்த இக்கட்டான நிலைமைகளில் நம்முடைய துணிவை அதிகரிக்கச் செய்கிறார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்: உலகம் இந்தப் பேரழிவு வருவதற்கு முன்னரே இதிலிருந்து தப்பித்து விட வேண்டும் என்று ஓர் அஹ்மதி துஆ செய்ய வேண்டும். ஒரு கற்பனைக்கு இந்தப் பேரழிவு வருகிறது என்றால், அதன் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காகவும் துஆ செய்ய வேண்டும். நாம் வேறு என்ன செய்ய முடியும்? நாம் நமக்கு முன்னால் இருள் இருப்பதைப் பார்க்கும்போது, நம்மால் மற்றவர்களையும் அதன் பாதிப்புகள் குறித்து எச்சரிக்க முடியும்.

இப்பொழுது எல்லாம் வல்ல அல்லாஹ்வால் மட்டுமே உலகத்தைக் காப்பாற்ற முடியும். அந்த மக்களிடம் சிறிது உணர்வை ஏற்படுத்த முடியும். அல்லது அவர்களுக்குப் புரிய வைப்பதற்கான நமது முயற்சியைப் பலனளிக்க வைக்க முடியும். இதன் காரணமாகவே, நான் ஏறக்குறைய ஓராண்டுக்கு அல்லது ஈராண்டுகளுக்கு முன் உலகளாவிய தலைவர்களுக்குக் கடிதம் எழுதி அவர்களிடம், உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக விழிப்புணர்வுடன் இருங்கள். உங்களைப் படைத்தவனைக் கண்டும் காணாமல் இருக்காதீர்கள் என்று கூறியிருந்தேன். ஆனால், அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்துவதுமில்லை; இதைப் புரிவதுமில்லை. அவர்கள் பௌதிகத்தில் மூழ்கியுள்ளார்கள். அல்லாஹ்வின் கருணையால் மட்டுமே அவர்களைக் காப்பாற்ற முடியும்.

ஆனால், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று எவரும் நூறு சதவீதம் உறுதியுடன் வாதம் செய்ய முடியாது என்பதை மனதில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் நாட்டமிருந்தால் அவன் நம்மை அழிவிலிருந்து காப்பற்றுவானாக என்று மட்டுமே நம்மால் துஆ செய்ய முடியும். ஒருவேளை அல்லாஹ்வின் நாட்டம் வேறு ஒன்றாக இருக்கிறது எனில், எதன் விளைவில் உலகத்தில் மனிதர்களின் பெரும்பான்மை அழிந்து போவதற்கான சாத்தியம் இருக்கிறதோ அப்படிப்பட்ட பரந்து பட்ட அழிவிலிருந்து அல்லாஹ் தப்பிக்கச் செய்வானாக! (ரிவ்யூ ஆ∴ப் ரிலீஜியன்ஸ் இதழுக்கு வழங்கிய நேர்காணல்)

உலகத்தில் பொது அமைதியை நிலைநாட்டுவதற்காக ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் எவ்வாறு வேதனை மிகுந்த அறிவுரைகளைக் கூறுகிறார்களோ அது மட்டுமின்றி, அதையும் கடந்து இறைவனின் படைப்பினங்களுடன் உண்மையான அனுதாபத்தை வெளிப்படுத்தியவாறு அதற்காக இயன்ற அளவுக்கு முயற்சிகளும் மேற்கொள்கிறார்கள். அதைப் பார்த்து முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என ஒவ்வொருவரும் புகழ்ந்து கூறுகிறார்கள்.

ஸ்பெயின் நாட்டின் பேத்ரோபாத் பகுதியின் முன்னாள் மேயராக இருந்த மீகல் கார்ஸியா (Miguel Garcia) சாஹிப் அவர்கள் இந்தக் கருத்தரங்கு பற்றி இவ்வாறு கூறினார்கள்:

“இந்த ஜமாஅத் தன்னுடைய நோக்கங்களைப் பெறுவதில் வெற்றி அடைந்திட வேண்டும் என்பது எனது ஆசையாகும்..... நான் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்கள் கூறிய சொற்களால் மிகவும் இன்புற்றேன்.

அவர்கள் போர்களும் சண்டைகளும் இல்லாத ஓர் அமைதி நிறைந்த சமூகத்தை நிறுவுவது பற்றி கூறியிருந்தார்கள்.

தற்காப்பு என்ற பெயரில் மனித குலத்தை விட ஆயுதத்திற்கு முன்னுரிமை வழங்கும் அரசாங்கங்களையும் அன்னார் கண்டித்தார்கள். மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் நீதி மற்றும் ஒருவருக்கொருவர் இடையே கண்ணியம் மற்றும் மரியாதையின் அடிப்படையில் உள்ள ஒரு சமூகத்தை உருவாக்க, பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்த மக்களை ஓரிடத்தில் ஒருங்கிணைக்க அழைப்பு விடுத்ததில் மகிழ்ச்சியடைகிறேன்.

வேறுபாடுகளால் நிரம்பியுள்ள ஓர் உலகத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். சில நாடுகள் முன்னேற்றத்தின் எல்லையைத் தொட்டு விட்டன. அதே சமயம் மக்களின் ஒரு பெரும் எண்ணிக்கை பசி பட்டினியால் மரணித்துக் கொண்டிருக்கிறது.

ஒரு பக்கம் நாம் இலட்சக்கணக்கான டன் உணவைக் கடலில் வீசி விடுகிறோம். இன்னொரு பக்கம், மிகவும் சிரமப்பட்டு உண்பதற்கு ஏதாவது கிடைக்கின்ற கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். ஒரு பக்கம் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இன்னொரு பக்கம் சமூகத்தின் சில வர்கத்தினர் ஏழ்மையின் உச்சத்திற்கே சென்று விட்டனர்.

போரை விட்டு விட்டு அமைதியை நாடுகின்ற, அனைவரையும் உடன் அழைத்துக் கொண்டு ஒன்றாக முன்னேறக்கூடிய, அநீதிக்கு எதிராக நிற்கக்கூடிய மற்றும் சமூகநீதியை நிலைநாட்டக்கூடிய ஓர் உலகை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது.'' (ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மார்ச் 7, 2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து)

இறுதியில் நான், ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் வழங்கிய ஆன்மாவுக்கு எழுச்சியூட்டக்கூடிய ஓர் வழிகாட்டலுடன் எனது இந்தக் கட்டுரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்-கள்: "எனவே, (இது) மிகவும் சிந்திக்க வேண்டிய இடமாகும். மிகவும் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. மிகவும் கவலைப்பட வேண்டிய இடமாகும். உண்மையான அமைதியையும் சமாதானத்தையும் உலகத்தில் ஏற்படுத்து-வதற்காக ஓரிறைவன் மீதான தனது ஈமானை உறுதியாக்க வேண்டியது இன்று ஒவ்வோர் அஹ்மதியின் பணியாகும்.

இறைவன் மீதான அன்பை, வேறு எந்த ஒன்றின் மீதான அன்பும் அந்த இடத்தைப் பறித்துக் கொள்ளாத அளவுக்குத் தன் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும். அவனுடைய கட்டளைகளின்படி செயல்படுவதற்காக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய போதனையை, அதாவது, திருக்குர்ஆனைத் தனது வாழ்வின் அங்கமாக்கிக் கொள்ள வேண்டும். திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு வழிகாட்டலும் நம்முடைய சொல் மற்றும் செயலின் அங்கமாக ஆகும் அளவுக்கு நம்முடைய தகுதி சென்றடைந்து விடும் போதுதான், நம்மால் உலகிற்கு இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியைச் சென்றடைய வைக்க முடியும்.


அவர்களுக்கு உண்மையான அமைதிக்கான உத்தியின் போதனையை நாம் முன்னால் எடுத்து வைத்துக் காட்டுவது மட்டுமல்லாமல், அதையும் கடந்து, நம்முடைய செயல்களாலும் கற்றுக் கொடுப்போம். இதுவே உலகத்தில் உண்மையான அமைதியை நிலைநாட்டுவதற்கான வழியாகும். இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உலகளாவிய அமைதிக்கான மாமனிதராக நிரூபிப்பதற்கான வழியாகும். இதுவே இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யக் கூடியவர்களின் வாயை அடைப்பதற்கான வழியாகும்.

எவ்வாறு இருப்பினும், இன்று இந்தப் பணி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாமும் வீட்டின் மட்டத்திலிருந்து சர்வதேச மட்டம் வரை இதற்கு ஏற்ப நமது பங்களிப்பை நிறைவேற்றவில்லை என்றால், நாமும் அமைதி மற்றும் சமாதானத்தில் இருப்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை; நம்முடைய சந்ததிகளும் அமைதியிலும் சமாதானத்திலும் இருப்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை; மேலும், உலகின் அமைதி மற்றும் சமாதானத்திற்கும் எந்த உத்தரவாதமும் இல்லை. அல்லாஹ் உலகத்தை இருளில் இருந்து ஒளியை நோக்கிக் கொண்டு செல்வதற்கான வழிவகையாக நம்மை ஆக்குவானாக. அல்லாஹ் நமக்குச் சிறந்த முறையில் கடமையை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக.''

அல்லாஹ் உலகைத் தன்னால் அனுப்பப்பட்ட தூதரை அடையாளம் கண்டு கொள்வதில் இப்பொழுது மேலும் தாமதப்படுத்தாமல் இருக்கச் செய்வானாக! அதன் மூலம் இந்தப் பாதுகாப்பு அரண் எட்டுத் திக்கிலிருந்தும் அவர்களை மூடிக் கொள்ளும்படிச் செய்வானாக! அவர்களுடைய நிரந்தரமான ஈடேற்றத்திற்கான காரணமாக அமைய வைப்பானாக! ஆமீன்.

**மனிதன் தானே துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் போது, அச்சமயத்தில் மற்றவர்களுடன் அனுதாபமாக நடந்து கொள்வது ஒரு மிகப் பெரிய சவாலாகும்.**

**நம்மிடம் உண்பதற்கு ஒரே ஒரு ரொட்டிதான் உள்ளது என்றால், அதிலிருந்தும் பசித்திருக்கும் ஒருவருக்குப் பங்கு கொடுக்கும் இந்த செயலே உண்மையான அனுதாபம் ஆகும். இதைத்தான் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கிறார்கள்.**



# ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் (அய்யதஹுுல்லாஹ்...) அவர்கள் 05.04.2024 அன்று ஆற்றிய ஜுுமுஆ பேருரையில் எடுத்துரைத்த பெருமானார் (ஸல்) அவர்களின் துஆக்களில் சில...

ஒருமுறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரழி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் நான் எனது தொழுகையில் செய்யும் விதமாக ஏதேனும் ஒரு துஆவைக் கற்றுத் தாருங்கள் என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கீழ்வரும் துஆவை செய்யுமாறு கூறினார்கள்.

اَللّٰهُمَّ اِنِّىْ ظَلَمْتُ نَفْسِىْ ظُلْمًا كَثِيْرًا وَلَمْ يَغْفِرُ الذُّنُوْبَ اِلَّا اَنْتَ،
فَاغْفِرْ لِىْ مَغْفِرَةً مِّنْ عِنْدِكَ، وَارْحَمْنِىْ اِنَّكَ اَنْتَ الْغَفُوْرُ الرَّحِيْمُ

அல்லாஹ்வே! நான் எனது ஆன்மாவின் மீது அநீதி இழைத்து விட்டேன். அதிகமாக அநீதி இழைத்து விட்டேன். உன்னைத் தவிர பாவங்களை மன்னிப்பவர் எவருமில்லை. எனவே உன் தரப்பில் இருந்து நீ என்னை மன்னிப்பாயாக! என் மீது கருணை புரிவாயாக! நிச்சயமாக நீயே மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவாய்.

பிறகு முஸ்அப் பின் சஅது தம் தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள். ஒரு காட்டரபி ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் வந்து நான் செய்துவரும் வகையில் ஏதேனும் ஒரு விஷயத்தை எனக்குக் கற்றுத் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ، وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ اللّٰهُ اَكْبَرُ كَبِيْرًا، وَالْحَمْدُ لِلّٰهِ كَثِيْرًا،
سُبْحَانَ اللّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ، لَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ الْعَزِيْزِ الْحَكِيْمِ

அதாவது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் யாரும் இல்லை. அவன் தனித்தவன் ஆவான். அவனுக்கு இணை யாரும் இல்லை. அவன் அனைவரையும் விடப் பெரியவன். புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே. அவன் தூயவன். அவன் அனைத்து உலகங்களையும் படைத்துப் பரிபாலிப்பவன் ஆவான். அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த ஆற்றலும், சக்தியும் இல்லை. அவன் மேலோங்கியவனும், கண்ணியத்திற்குரியவனும் ஆவான். மேலும் அவன் மிகுந்த ஞானமுடையவன் ஆவான்.

அந்தக் காட்டரபி கூறினார்: யாரஸுுலல்லாஹ் (ஸல்)! இது என்னுடைய இறைவனுக்காகும். அவனை நான் புகழ்கின்றேன். எனக்கான துஆ என்ன என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவ்வாறு கூறி வாருங்கள்.

اَللّٰهُمَّ اغْفِرْ لِىْ وَارْحَمْنِىْ وَاهْدِنِىْ وَارْزُقْنِىْ

அதாவது அல்லாஹ்வே! என்னை மன்னித்தருள்வா-யாக! என் மீது கருணை புரிவாயாக! எனக்கு நேர்வழி காட்டுவாயாக! மேலும் எனக்கு ரிஸ்கை வழங்குவாயாக!

இன்னொரு அறிவிப்பில் வந்துள்ளது. ஒரு நபர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு இந்த துஆவை கற்றுக் கொடுத்து வந்தார்கள். அபு மாலிக் அஷ்ஜயீ அவர்கள் தம் தந்தையிடமிருந்து அறிவிப்பு செய்கின்றார்கள். எவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாலும் பெருமானார் (ஸல்) அவர்கள் அவருக்கு தொழுகையைக் கற்றுக் கொடுப்பார்கள். பிறகு அன்னார் கூறுவார்கள்: இந்தச் சொற்களைக் கொண்டு துஆ செய்யுங்கள்.



اَللّٰهُمَّ اغْفِرْ لِىْ وَارْحَمْنِىْ وَاهْدِنِىْ وَعَافِنِىْ وَارْزُقْنِىْ

அதாவது அல்லாஹ்வே! என்னை மன்னிப்பாயாக! என் மீது கருணை காட்டுவாயாக! எனக்கு நேர்வழியை வழங்குவாயாக! மேலும் என்னை நலமுடன் வைப்பாயாக! மேலும் எனக்கு ரிஸ்கை வழங்குவாயாக!

இந்த துஆவை எடுத்துரைத்தவாறு ஹுுஸுுர் அவர்கள் கூறினார்கள்: இப்போது இரண்டு சஜ்தாக்களுக்கு நடுவே உள்ள துஆ - அதிலும் கூட நாம் இந்த துஆவையே செய்கின்றோம். ஆனால் மக்கள் சஜ்தாவிலிருந்து எழுகின்றார்கள். பிறகு குனிந்து விடுகின்றார்கள். அவர்கள் துஆவைச் செய்வது போன்று தெரிவதில்லை. அவர்களின் பார்வையில் இதற்கு எந்த ஒரு முக்கியத்துவமும் இல்லை என்பது போன்று தோன்றுகிறது. ஆனால் இதை நன்கு சிந்தித்துப் புரிந்து கூற வேண்டும். எங்கு ரிஸ்க் என்பது பௌதிக உணவு என்று பொருள்படுமோ அதே வேளையில் ஆன்மிக ரீதியிலும் பொருள்படும். அதிலும் முன்னேற்றம் பெறுதல் என்பதாகும். எனவே இந்த சிந்தனையோடு நாம் இந்த துஆக்களைச் செய்ய வேண்டும். எங்கு நாம் அல்லாஹ்வைப் புகழ்கின்றோமோ அங்கு நம்முடைய சீர்திருத்தம் மற்றும் நேர்வழி மற்றும் ஆன்மிகத்தில் முன்னேறுவதற்காகவும் துஆ செய்ய வேண்டும். நம்முடைய துஆக்கள் உலகத்தைப் பெறுவதற்காக மட்டும் இருக்கக் கூடாது. மாறாக நம்முடைய புற மற்றும் அக நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படுவதற்காகவும் துஆ செய்ய வேண்டும். இவ்வாறு நாம் துஆ செய்யும் பொழுது குறிப்பான கவனம் செலுத்தும் பொழுது பிறகு எல்லா வகையான அருள்களின் மழை நம் மீது இறங்குவதை நாம் பார்ப்போம்.

**(தமிழில்: மவ்லவி M.B. தாஹிர் அஹ்மது)**